
# தொண்டன்

(ஆரம்பம் : 1969 பெப்ரவரி)



சொறிக்கல்முனை
திருச்சிலுவை திருத்தலம்



புனித கப்பல் ஏந்தி மாதா
ஆலயம்,
அமிர்தகழி

# விசுவாச வளர்ச்சியில் ௨௦௦ ஆண்டுகள்



புனித மரியாள்
இணைப் பேராலயம்,
புளியந்தீவு



புனித சூசையப்பர்
ஆலயம்,
தன்னாமுனை

ஒக்டோபர் 2008 சமய - சமூக - இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஒக்டோபர் - 2008

மலர்- 40 இதழ்- 09

**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**

நிரோன்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


# உள்ளே




| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு.... - | 01 |
| செபமாலை - | 02 |
| இரண்டு நூற்றாண்டுகளை... - | 03 |
| வெரித்தாஸ் வானொலி - | 05 |
| வாழ்வின் முழுமை - | 06 |
| நா காக்க - | 07 |
| முறைப்பாடுகள் - | 08 |
| பகிடிகள் - | 10 |
| கையில் எடு... - | 11 |
| இலக்கிய மஞ்சரி - | 14 |
| புது யுகத்துள்... - | 16 |
| தொண்டனின் சில நிமிடங்கள் - | 17 |
| புனித பிரான்சிஸ் அசிசி - | 18 |
| அதிகம் கேட்காத பழமொழிகள் - | 19 |
| மாணவர் பக்கம் - | 20 |
| ஏன் - | 21 |
| கடுகுக்கதை - | 22 |
| புதிய ஏற்பாட்டு... - | 23 |
| உங்கள் சுகமான வாழ்வுக்கு... - | 24 |
| நாட்டுப்புறப் பாட்டு... - | 25 |
| விவிலியம் கற்போம் - | 27 |
| அறிவை வளர்ப்போம் - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE

P. O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486

E.mail: scctribatti@gmail.com



விலை : 20/=

ஆண்டு சந்தா : 350/=

(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

இறை பிரசன்னத்தை முழுமையாக வெளிப்படுத்துவன ஆலயங்களே. **இறைவார்த்தை, திவ்விய நற்கருணை, குருவானவர், துறவறத்தார், இறை சமூகம், சிற்பங்கள், ஓவியங்கள் என்பன இறைவனின் பிரசன்னத்தையும் இறைவெளிப்பாட்டையும் ஆலயங்களின் ஊடாக தெட்டத்தெளிவாக** நமக்குத் தருகின்றன. 'கோயிலில்லா ஊரிலே குடியிருக்காதே' என்றொரு பழமொழி எம்மத்தியிலே வழக்கத்தில் உள்ளதையும் நாம் அறிவோம்.

ஆலயங்கள் கட்டப்பட்டு, வழிபாடுகள் தொடங்கப்பட்டு, ஆங்காங்கே இருந்த கத்தோலிக்கர்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு, ஒரு கட்டமைப்புக்குள்ளே கொண்டுவரப்பட்டு, விசுவாசத்தில் உயர்ந்து 200 வருடங்களை நிறைவு செய்து நிற்கின்றன சில பங்குகள் எமது மறைமாவட்டத்தில். அவை: **புளியந்தீவு புனித மரியாள் இணைப்பேராலயம், சொறிக்கல்முனை புனித திருச்சிலுவை ஆலயம், தன்னாமுனை புனித சூசையப்பர் ஆலயம், அமிர்தகழி புனித கப்பல் ஏந்தி மாதா ஆலயம்** என்பனவாகும்.

பல வெளிநாட்டுப் படைகள் எமது இலங்கை மண்ணை சுவீகரித்து ஆட்சி செய்த காலத்தில் கத்தோலிக்க மதம் பரவிக்கொண்டுவரும் ஆரம்ப காலகட்டத்தில் சொல்லொண்ணாத் துயரங்களையும், அடக்குமுறைகளையும் சந்திக்க நேர்ந்தது என்பதையும் நாம் அறிவோம். அந்தக் காலகட்டங்களில் எல்லாம் விசுவாசத்தில் நிலைத்திருந்து, விசுவாசத்தைப் போசித்து, அதே விசுவாசத்திற்காக உயிர் நீத்த விசுவாசிகள், மறைசாட்சிகள், மிஷனரிமார்கள் என்போர் இன்று நினைவுகூரப்படவேண்டியவர்களே. **இவர்களது வியர்வையும், இரத்தமும், வித்துடலும், மண்ணிலே வெறுமனே சாய்க்கப்படவில்லை; மாறாக விதைக்கப்பட்டிருக்கின்றன.** இந்த விதைகளே 200 வருடங்களில் பூவாக, காயாக, கனியாக, விருட்சமாக உயர்ந்து நிற்கின்றன.

இன்று 200 வருடங்களை நிறைவுசெய்யும் ஆலயங்களில் தன்னாமுனை சூசையப்பர் ஆலயம் நமது மறைமாவட்டத்திற்கு புதிய துணை ஆயரைத் தந்திருக்கின்றது. இது மெச்சுதற்குரிய விடயமே. **இருந்தும் இந்நான்கு ஆலயங்களில் இருந்து கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் திருச்சபைக்கு வழங்கிய பங்களிப்பு திருப்தி அளிப்பதாக இல்லை** என்பதைப் பலரும் பேச நாம் அறியக்கூடியதாக உள்ளது. இதில் யாரையும் யாரும் குற்றம் சாட்டமுடியாது. தப்பு எங்கோ ஓர் இடத்தில் இடம்பெற்றிருக்கின்றது. கத்தோலிக்கத் திருச்சபை மிஷனரிமார் காலத்திலிருந்து ஒரு வழங்கும் திருச்சபையாக மாத்திரமே செயல்பட்டதாலோ என்னவோ; மக்கள் கொடுப்பதற்குச் சற்று பின்தங்கி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. **கேட்டுவரும்போதெல்லாம் கொடுத்தால் பங்குக் குரு நல்லம். கொடுக்க மறுத்தால் பங்குக் குரு மோசம்.**

**சுனாமி அனர்த்தத்திற்குப் பின் நமது கத்தோலிக்கத் திருச்சபை எமது மறைமாவட்டத்தில் சர்ச்சைக்கு உள்ளாகியது.** பல நேற்று முளைத்த காளான் திருச்சபைகளும் வீடும், வளவும், வாகனமும், பணமும் கொடுத்தன; தங்கள் பக்கம் மக்களை இழுத்தன. அப்போது நமது கத்தோலிக்கத் திருச்சபை சற்றும் தளராது மனிதநேயப் பணிகளை சாதி, மத, இன, மொழி பேதமின்றி அனைவருக்கும் வழங்கியது. ஏன் இன்றும் வழங்கி வருகின்றது. ஏனெனில் **திருச்சபையின் நோக்கம் வேறுபாடுகள் இன்றி இறைவனின் அன்பை வெளிப்படுத்துவதும், தெரிவிப்பதுமேயாகும்.**

"நாடு உனக்கு என்ன செய்தது? என்று கேட்காதே. மாறாக நீ நாட்டிற்கு என்ன செய்தாய்? என்று கேட்டுப்பார்" இவ்வாறு சொல்கிறார் மேதை பேணாட் ஷா. அதேபோன்று ஒவ்வொரு கிறிஸ்தவனும், கிறிஸ்தவளும் நான் திருச்சபையின் வளர்ச்சிக்காக என்ன பங்களிப்பைச் செய்கிறேன் என்று கேட்டுப் பார்க்கவேண்டிய காலமிது. **முதலில் ஒவ்வொரு குடும்பமும் இறைவிசுவாசத்தில் முதிர்ந்து குடும்ப செபத்திலே நிலைத்திருக்கவேண்டும்.** தங்கள் குடும்பத்திலிருந்தும் தேவ அழைத்தல்கள் உருவாக வேண்டும் என்ற சிந்தனையில் முயற்சிகள் எடுக்க வேண்டும்.

எனவே ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் குறைந்தது ஒரு குருவையோ, துறவியையோ இறைவனுக்காக கொடுக்க நாம் முன்வருவோம். குடும்ப அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்திச் சபைகளில் அங்கத்துவம் பெற்று திருச்சபையைக் கட்டியெழுப்புவோம்.

**– ஆசிரியர்**




## இறைவாக்கு

"கெட்ட கனி தரும் நல்ல மரமுமில்லை; நல்ல கனி தரும் கெட்ட மரமுமில்லை. ஒவ்வொரு மரமும் அதனதன் கனியாலே அறியப்படும்."

(லூக்கா: 06:43-44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலை

## வரலாற்றுப் பாதையில்........

செபமாலைப் பக்தி முயற்சிகள் மிகப் பழமை வாய்ந்தவை. மூவொரு கடவுள் செபமாலை, அன்னை மரியாவின் ஏழு துக்க இரகசியச் செபமாலை, திருக்காய செபமாலை, மீட்பின் முடிச் செபமாலை, திரு இரத்தத்தின் செபமாலை, தூய பிரிஜ்ஜெட் செபமாலை, தூய சூசை செபமாலை, திரு இருதயச் செபமாலை, திரு இரக்கச் செபமாலை, எனப் பல முடிச் செபமாலைப் பக்திமுயற்சிகள் கத்தோலிக்கத் திருச்சபையின் மன்றாட்டுப் பூர்வீகத்தில் உள்ளன.

செபமாலையை இலத்தீன் மொழியில் ரோசாரியும் என அழைப்பர். ரோசா மலர்த் தோட்டம் என்பதே இதன் அர்த்தமாகும்.

கத்தோலிக்க மன்றாட்டுப் பாரம்பரியத்தில் செபமாலை என்றால் டொமினிக்கன் செபமாலையை அதாவது அன்னை மரியாவின் 153 மணிச் செபமாலையைக் குறிக்கும்.

3ம் நூற்றாண்டுகளில் வனத்துத்தந்தையர் நாம செபத்தை திரும்பத் திரும்ப சொல்லுவதை எண்ணுவதற்காக செபக்கயிறுகளைப் பாவித்தனர்.


1075ல் கோடிவியா என்ற பெண் மன்றாட்டுக்களைச் சரியாக எண்ணுவதற்காக பெறுமதியான கற்களைக் கட்டிவைத்ததாகத் தெரிகிறது.

துறவறசபையினர் 150 திருப்பாக்களை நாளாந்தம் திருமணி நேரத்தில் பாடும் வழக்கம் உருவானபோது இலத்தீன் மொழி தெரியாத துறவிகள் 150 முறை இயேசு கற்பித்த செபத்தை எண்ணிச் சொல்வதற்காக மணிகளை வட்டவடிவில் கட்டிய கயிற்றைப் பாவித்தனர்.

இவ்வாறு பல்வேறு காலகட்டங்களிலும் பலவாறு வளர்ந்துவந்த இப்பக்திமுயற்ச்சிக்கு 13ம் நூற்றாண்டில் வாழ்ந்த தோமஸ் டி அபிபுஸ் என்ற துறவி "ரோஸா" என்ற சொல்லை முதன் முதல் பாவித்தார்.

15ம் நூற்றாண்டில் என்றிக்கோ டி கல்கார் என்ற சிஸ்ரிகன் துறவி 150 மங்கள வார்த்தை மன்றாட்டை பத்துப் பத்தாகவும் இயேசு கற்பித்த மன்றாட்டை இடையிலும் சொல்லும் முறையை உருவாக்கினார்.

இன்று சொல்லும் அன்னை மரியாவின் செபமாலையானது மரியாவின் புகழ் மாலை என்று கூறியவர் தூய அலன் டி றோச். இவரே நூற்றியைம்பது முறை சொல்லும் செபமாலையை ஐம்பதாக மூன்று முறை சொல்லும் மாற்றத்தை உருவாக்கினார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டு நூற்றாண்டுகளைக் கண்ட சொறிக்கல்முனை திருச்சிலுவை ஆலயம்

– சிறப்புக் கட்டுரை –

கிழக்கு மாகாணத்தில் திகாமடுல்ல மாவட்டத்தில் அமைந்துள்ள பழம்பெரும் கிராமங்களுள் ஒன்றான சொறிக்கல்முனை கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிராமமாகும். ஏறத்தாள தொண்ணூறு வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் கிறிஸ்தவர்களே!

இலங்கையில் போர்த்துகீசர் வருகையுடன் கிறிஸ்தவ மதம் வந்தது என்று பொதுவாகக் கூறப்பட்டாலும் அண்மைக்கால ஆய்வுகளின்படி போர்த்துக்கீசரின் வருகைக்கு முன்பே கிறிஸ்தவம் பரவியிருந்தமை தெரியவருகிறது. கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான திருத்தூதர் தோமையார் தென்னிந்தியாவின் கேரளம் மற்றும் தமிழ்நாடு மானிலங்களில் நற்செய்திப் பணிபுரிந்து கிறிஸ்தவ நெறியைப் பரப்பியுள்ள நிலையில் தமிழ்நாட்டுக்கு மிக அருகில் உள்ளதான இலங்கையில் அதுவும் போக்குவரத்துக் கட்டுப்பாடற்ற அக்காலத்தில் கிறிஸ்தவ அடியார்களால், பயணிகளால் கிறிஸ்தவ நெறி இலங்கையில் பரவிட அதிக வாய்ப்புகள் இருந்துள்ளன. ஆகவே முதல் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலே கிறிஸ்தவ நெறி இலங்கையில் பரவியிருக்கலாம் என்ற கூற்றை ஏற்றுக் கொள்ள இடமிருக்கிறது. மேலும் தமிழகத்திலுள்ள தூத்துக்குடிப் பிரதேசத்திலிருந்து வந்த மக்களே சொறிக்கல்முனையில் குடியேறினர் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்ற நிலையில் தூத்துக்குடி கடற்கரைப் பிரதேசமாக இருப்பதாலும் கடல்வழிப் பயணங்களை மேற்கொண்டு வந்த நற்செய்திப் பணியாளர்கள் கடற்கரையை அண்டிய பகுதிகளிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நற்செய்திப் பணியாற்றினர் என்பதாலும் தூத்துக்குடியிலிருந்து குடியேறிய மக்கள் அல்லது மக்களில் பலர் கிறிஸ்தவர்களாக இருந்திருக்கலாம். இது சரியானால் சொறிக்கல்முனையில் மற்றும் இலங்கையில் ஏனைய கடற்கரைப் பிரதேசங்களில்கூட கிறிஸ்தவத்தின் வருகை 2000 ஆண்டு பழமை வாய்ந்ததாகவே இருக்கும்.

இத்தகைய வரலாற்றுப் பழமை வாய்ந்த கிறிஸ்தவ மக்கள் வாழ்ந்த சொறிக்கல்முனைக் கிராமத்தில் மக்கள் ஒன்றுகூடி இறைவனை வழிபடி ஓலைக் குடில்களாலான கோயில்களாவது இருந்திருக்கவேண்டும். அப்படி இருந்ததாகக் குறிப்புகளும் கூறுகின்றன. ஆயினும் தற்போது உள்ளது போன்று நிலையான, உறுதியான ஆலயம் உருவாக்கப்பட்டு இருநூறு ஆண்டுகள் நிறைந்துள்ளதையே தற்போது விழாவெடுத்துக் கொண்டாடப்படுகிறது. அதேகாலப் பகுதியில் மட்டக்களப்பு புளியந்தீவு மரியாள் ஆலயமும் அவை எல்லாவற்றுக்கும் முன்னதாக தாண்டவன்வெளி காணிக்கை மாதா ஆலயமும் எழுந்தன என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

மேலும் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றிய பின் (1656) கத்தோலிக்க விசுவாசிகள் பல்வேறு இடுக்கண்களைச் சந்தித்தனர். திருச்சபைப் பணியாளர்கள் வெளிப்படையாக மறைபணி ஆற்ற முடியாத நிலை. விசுவாசிகள் தமது விசுவாசத்தை, வழிபாடுகளை அறிக்கையிட வழிபட முடியாத தடை. இந்நிலையில் இந்தியாவின் கோவாவிலிருந்து தியான சம்பிரதாயக் குருக்கள் மாறுவேடத்தில் இலங்கை வந்து மறைபணி ஆற்றினர். அவர்களில் முக்கியமானவர்கள் இலங்கையின் அப்போஸ்தலர் என்று புகழப்படும் முத்திப்பேறு பெற்ற யோசப்வாஸ் அடிகளும் இலங்கையின் தேசீய மொழிகளில் புலமை பெற்று 'வியாகுலப் பிரசங்கம்' உட்பட பல நூல்களைத் தந்த யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாருமாவர். இவர்கள் இருவரும் சொறிக்கல்முனைக்கு மாறுவேடத்தில் வருகை தந்து விசுவாசிகளைத் திடப்படுத்தினர், சிற்றாலயம் அமைத்தனர் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இவ்வாறு தூயோரின் பாதம் பதிந்து புகழ்சேர்த்த இம்மண்ணிலே பல்லேறு காலகட்டங்களில் திருச்சிலுவை ஆலயம் புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. 1808ல் முதன்முதலாக நிலையான ஆலயத்தை கோவைக் குருக்களின் அனுசரனையுடன் பாஸ்கல் முதலியார் அமைத்தார். நீண்டகாலத்தின் பின் 1983ம் ஆண்டு பங்குத் தந்தையாக இருந்த அருள்தந்தை எல்மோ அடிகளாரின் முயற்சியால் ஆலயமும் புனரமைக்கப்பட்டது. தற்போது மீண்டும் ஜூபிலி ஆண்டை முன்னிட்டு பங்குத்தந்தை அருள்திரு ரஜீவன் அடிகளாரின் வழிகாட்டலுடன் மீண்டும் ஆலயம் விரிவாக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

கிழக்குப் பிரதேசத்தில் மிகவும் பிரசித்திபெற்ற புதுமைகள் நிகழும் தலமாக விளங்கும் சொறிக்கல்முனைக் கிராமம் நீண்ட காலமாக பக்தியுடன் மக்கள் பலரும் தேடிச் சென்று வழிபடும் திருயாத்திரைத் தலமாக விளங்குகிறது. தற்போது அரசாங்கம் இதனை யாத்திரைத் தலமாகப் பிரகடனப்படுத்தியிருப்பது மேலும் சிறப்புத் தருவதாகும்.

இயேசுவின் திருச்சிலுவையில் ஒரு சிறிய பகுதி இங்கே வைக்கப்பட்டு மிகவும் பூசிதமாக வணங்கப்படுகிறது. அத்துடன் இங்கு ஒவ்வோர் ஆண்டும் பாஸ்கா காலத்தில் நடைபெறும் திருப்பாடுகளின் காட்சி இத்திருத்தலத்தின் புகழ்பெற்ற, மரபார்ந்த கலைவடிவமாகவும் கிழக்குப் பிரதேச மக்கள் பலரும் சென்று பக்தியுடன் கண்டு இரசிக்கும் காட்சியாகவும் விளங்குகிறது.

இன்னும் ஜூபிலி ஆண்டை முன்னிட்டு விசுவாச வாழ்வை ஆழப்படுத்தி பொருள்ளதாக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது மட்டுமன்று ஏனைய விசுவாசிகளுக்கு முன்மாதிரிகையுமாகும். ஜூபிலி ஆண்டுப் பெருவிழா மறைமாவட்ட ஆயர் அவர்கள் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் மாபெரும் கலை நிகழ்வுகளும் நடைபெறுகிறது. மறைமாவட்டத்துக்குப் பெருமை சேர்க்கும் சொறிக்கல்முனை திருச்சிலுவை ஆலயத்தின் ஜூபிலி விழா விசுவாசப் பேரொளியை இந்நிலமெங்கும் பரப்புவதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணியின்

## ~ உறவுச் சங்கமம் ~

## இலங்கை நேயர்களுடன் ஒரு சந்திப்பு

பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒலிபரப்பாகும்
வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணிக் குழுவினர்
இலங்கைக்கான பயணம் ஒன்றை
மேற்கொண்டுள்ளனர்.
இலங்கை நேயர்களைச் சந்தித்து உரையாட – உறவைப்
புதுப்பித்துக்கொள்ள வரும் இவர்கள் மட்டக்களப்பு,
திருகோணமலை, ஹற்றன் போன்ற இடங்களுக்கு
வருகைதரவுள்ளனர்.

| நாள் | இடம் | காலம் |
|---|---|---|
| ஒக்டோபர் 21 | அருள் ஒளி இல்ல மண்டபம் மட்டக்களப்பு | காலை 10.00 மணி |
| ஒக்டோபர் 23 | புனித மரியாள் பேராலய கலாசார மண்டபம் திருகோணமலை | மாலை 4.00 மணி |
| ஒக்டோபர் 26 | திருச்சிலுவை ஆலயம் ஹற்றன் | காலை 11.30 மணி |

வெரித்தாஸ் வானொலி நேயர்கள், ஊடகவியலாளர்கள்
மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

– சமூகத் தொடர்பு நிலையம் –
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்வின் முழுமை

அர்ச்சனை இல்லாத கடவுள் இல்லை, பிரச்சினை இல்லாத மனிதனும் இல்லை. பிரச்சினைகள், துன்பங்கள் மத்தியிலும் நாம் இறைவனை விட்டு அகலக்கூடாது.

ஒரு முனிவர் தன்னுடைய சீடர்களுக்கு அருளுரை வழங்க தனிமையான ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்கின்றார். அருளுரையைத் தொடங்க முன்னர் ஓர் அழகான வெள்ளை நிறக் கைக்குட்டையை உயர்த்திப் பிடித்து "என்ன தெரிகிறது?" என்று கேட்டார். எல்லோரும் "வெள்ளை நிறக் கைக்குட்டை" என்றார்கள். அதன் பின் சிறிது நேரத்தில் அந்தக் கைக்குட்டையில் மூன்று முடிச்சுகளைப் போட்டு உயர்த்திப் பிடித்து "முன்னால் காட்டப்பட்ட கைக்குட்டைக்கும் இப்போது காட்டப்படுகின்ற கைக்குட்டைக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன?" என்று கேட்டார். 'முடிச்சுகள் போட்டதால் கைக்குட்டை அசிங்கமாகியுள்ளது, கைக்குட்டையின் சுதந்திரம் பறிபோயுள்ளது, அதனால் இப்போது பறக்க முடியாது' என்றெல்லாம் பல பதில்கள் வந்தன.

"நமது வாழ்விலும் துன்பங்கள் என்ற முடிச்சுகள் வரும்போது நமது சுதந்திரம் பறிபோகின்றது. ஆனால், நாமே தேடிக்கொண்ட இந்த முடிச்சுகளை நாம் அவிழ்த்தால்தான் நாம் சுதந்திரமாக வாழ முடியும்" என்று அறிவுரை கூறினார்.

துன்பங்களை, பிரச்சனைகளைக் கண்டு நாம் துவண்டுவிடாமல் இறைவனோடு நாம் இணைந்திருக்கவேண்டும் என்பதே இறைவனின் விருப்பம்.

இறைவனோடு இணைந்திருந்த யோபு பல பிரச்சினைகளை, பல துன்பங்களைச் சந்திக்கின்றார். துன்பத்தின் எல்லைக்குச் சென்றவர் மனவிரக்தியோடு தன்னுடைய பிறந்தநாளைச் சபிக்கும் நிலைக்கு விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்படுகிறார். 'நினைத்தது நடக்கவில்லை என்பதற்காக நினைப்பதையே நிறுத்தி விடாதே'

நாமும் துன்பங்களை அடுக்கடுக்காகச் சந்திக்க நேர்ந்தாலும் இறைவனை விட்டு நாம் அகன்றுசெல்லக் கூடாது. கி.பி. 342-420 காலப்பகுதியில் வாழ்ந்து திருச்சபைக்கு அரும் பணியாற்றியவர் புனித ஜெரோம். இவரும் தனது வாழ்வில் பல துன்பங்களை ஏற்றுக்கொண்டு அந்தத் துன்பங்களின் மத்தியிலும் இறைவனின் வார்த்தையை மொழிபெயர்த்து ஆய்வு செய்து அந்த இறைவார்த்தையின் அர்த்தத்தை நமது இதயத்தில் பதித்துள்ளார்.

நாம் அன்றாடம் சந்திக்கின்ற துன்பங்களைக் கண்டு துவண்டுவிடாமல், ஆனமீகச் சோர்வு கண்டுவிடாமல் நாம் சந்திக்கின்ற துன்பத்தில் இறைவனின் இன்ப நிழலைக் காணவேண்டும்.

தங்கத்தை நெருப்பில் புடம்போடுவது போல இறைவன் மனிதனைத் துன்பத்தில் புடம் போடுகிறார். துன்பங்கள் இன்பத்தின் மேலுறைகள், துன்பங்கள் நம்மை இன்பத்திற்கு இட்டுச்செல்லும் ஏணிப் படிகள் என்பதை உணர்ந்து இறைவனின் நிழலில் வாழ, இறை அன்பை உணர, இறைவனின் இரக்கத்தை சுவாசிக்க முனைவோம்.

வாழ்வில் துன்பம் என்பதைவிட துன்பமே எமது வாழ்வாக அமைந்தாலும் இறைவனை விட்டு நாம் பிரியக்கூடாது. எமக்கு வரும் கஷ்டங்களின்

தொடர்ச்சி 13ம் பக்கத்தில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நா காக்க...

எல்லாம் வழமைபோல் நடந்தது
உன் குடும்பத்தைத் தவிர

சேவலின் அலாரம்
சூரிய பகவானின் வருகை
உயர்திணை அஃறிணை வேறுபாடற்ற
தென்றலின் தழுவுகை
பறவைகளின் இரைதேடலும் பாடலும்
தொழிலாளியின் உற்சாகப் புறப்பாடு என
சூரியனை விழுங்கிய பின்னரான
நிலாவின் ஊர்வலம் வரை
எல்லாமே வழமைபோல் நடந்தது
உன் குடும்பத்தைத்தவிர

ஒன்று நடைபயில முன்னமே பிறந்த
மறு குழந்தையும் சேர்ந்து அழுகிறதே
எதன் அழுகையை நிறுத்துவதென
அழுதுகொண்டே துடிக்கும் உன் மனைவி
'அவர் இருந்தாலும்....' என்ன
அப்பாவையும் நினைவில் இழுத்தழும் அம்மா
வயிறு பற்றும் வெப்பம் நெஞ்சில்
அடுப்பெரிக்க மனம் வருமா..... அது அக்கா
வெளிப்படையாய் அழ வயது தடுத்தது
கண்ணீரை இதையத்துள் வடித்தான் தம்பி
இவர்களைத்தவிர
எல்லாருக்கும் எல்லாமும் வழமைபோல் நடந்தது

உன் இல்லாமை
சமூகச் சக்கரத்தின் சுழற்சி வேகத்தை
நிறுத்தவுமில்லை. குறைக்கவுமில்லை
அதற்கு உன்னைத்தெரியாது

உன் இல்லாமை
உறவினர்களின் பாதையின் அச்சை
இம்மியும் அசைக்கவில்லை
அவர்களின் ஒடுங்கிய பாதையில்
மரண பயம் வேலியிட்டிருக்கலாம்

உன் இல்லாமை
நண்பர்களின் மதுபசாரங்களைக் கூட
தடுக்கவுமில்லை. குறைக்கவுமில்லை
உன் வெற்றிடம்
பணம் வைத்திருப்பவனால் நிரப்பப்பட்டது

ரணங்கள் உனக்கு மட்டும்
அதன் பலன்கள்
மனைவி. பிள்ளை. அம்மா. அக்கா. தம்பி. என
பலருக்கும் பகிரப்படுகிறதே

தீயவர் கையால் நீ அடைக்கப்பட்டு
அடிக்கப்பட்ட போதும் அலறிய போதும்
ஆலயத் திரைச்சீலை கிழியவும்
வானமிருளவும் பூமி பிளக்கவும்
நீயென்ன இயேசுவா?
ஆகவே
அவையும் வழமை போலவேயிருந்தன


உன் இல்லாமை
உலகத்தின் நியதியையும் நிலைமையையும்
மாற்றிவிடப்போவதில்லை
ஆனால் உன் குடும்பத்தின்
நியதியையும் நிலைமையையும்...........

காற்று
கண்டவன் காதுகளையும்
காசு கொடுத்து வாங்கிவைத்திருக்கிறது
ஆகவே...
நா காக்க

மூதூர். A. அமல்ராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முறைப்பாடுகள்

மற்றில்டா. இ

இன்றைய வாழ்விலே "வீட்டுக்கு வீடு வாசற்படி" என்பதுபோல முறைப்பாடுகள் எங்ஙணுமே வியாபித்துள்ளதென்பதை நாம் அறிகிறோம். "பிள்ளை சாப்பிடுவதில்லை. கொடுத்து முடிப்பதற்குள் போதும் போதும் என்றாகிவிடுகிறது" ஒரு மனிதன் குழந்தையாக இருக்கும்போதே அன்னையை முறைப்பட வைக்கிறான். "என் மகள் வீட்டிலே எவரையுமே மதிக்கிறாளில்லை. வாய் காட்டுகிறாள், சண்டை பிடிக்கிறாள்" பாடசாலைப் பருவம் பற்றிய ஒரு முறைப்பாடு இது. "ஏன் இன்றைய திருப்பலிக்கு உங்கள் மகன் வரவில்லை?" எனக் கேட்டால் "ஐயோ! அவனை எழுப்ப எழுப்ப கட்டையைப் போல் கிடக்கிறான். எழும்புவதேயில்லை" என்ற முறைப்பாடு. பங்குத்தந்தையோ "பூசைக்குதவ எவருமே வருவதில்லை. பெற்றோருக்கு அக்கறையில்லை" எனும் முறைப்பாட்டைத் தருகிறார். பக்திச்சபைகளோ, ஒன்றியங்களோ கேட்கவே வேண்டாம். "நேரத்திற்கு வருவதேயில்லை. கொடுக்கும் வேலைகளைப் பொறுப்புடன் செய்வதில்லை. 'சாணேற முழம் சறுக்குவதுபோல்' இருக்கிறது" என்ற முறைப்பாடுதான். இவை ஆயிரத்தில் ஓர் உதாரண வகைகள்தாம். இதைவிட அனேகமான முறைப்பாடுகள், எங்கு பார்த்தாலும் ஏராளம் ஏராளம். வீட்டிலோ, வேலைத்தளத்திலோ, ஆலயத்திலோ, பங்கிலோ எங்கும் எதிலும் பெரும் பாகத்தை வகிப்பது முறைப்பாடாகவே உள்ளது.

எங்கே ஒருவர் மீது பழு சுமத்தப்படுகிறதோ அவர் முறைப்பட ஆரம்பிக்கிறார். சுயநலம் மீறி தாங்கள் சோம்பேறிகளாகி ஒரு சிலர் ஓடியாடிச் செய்து முடிக்க அவர் நிழலில் குளிர்காயும் பல சந்தர்ப்பங்களில் இது ஆரம்பமாகிறது. எல்லோரும் எல்லாவற்றையும் பொறுப்புணர்ந்து சரியாகச் செய்யாத நிலை இதற்குக் காரணமாகிவிடுகிறது.

ஒவ்வொருவரும் தம்மைத் தாமே உணர்ந்து கொண்டால் முறைப்பாடுகள் அனைத்தும் முடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும். அலகையின் வயப்படும் போதெல்லாம் முறைப்பாடாகத்தான் வரும். நான் யார்? நான் செய்யவேண்டியவை எவை? என்பவற்றைச் சிறு பராயம் தொட்டே மனதிற்குள் விதைத்து உருப் போடவேண்டும். தொட்டிற் பழக்கம்தான் சுடுகாடு மட்டும் வரும். எதைச் செய்தாலும் மற்றவர்கள் குறை சொல்லாதபடி திறமையாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவசியமாகிறது. அதிகாலை வேளையில் நித்திரை விட்டெழுவது, செபிப்பது, திருப்பலிக்குச் செல்வது போன்றவற்றை முதலாவது மறைக்கல்வி நிலையமான வீடுதான் சொல்லித்தர வேண்டும். பழக்கத்திற்குக் கொண்டுவந்துவிட்டால் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செல்லும்.

இன்றைய உலகிலே யார் யாரை வழிநடத்துவது என்ற நிலைதான்காணப்படுகிறது. கட்டுக்கோப்பான வாழ்வு இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறது. இல்லங்களில் செல்வாக்கு இன்று பெற்றோருக்கும், பெரியோருக்குமல்ல - தொலைக்காட்சி சின்னத்திரைகளுக்கு என்றாகிவிட்டது. எவருக்கும் எவரையும் வழிநடத்த நேரமில்லை. பின் முறைப்பாடுகள் எழாமல் என்ன செய்யும்?

பகுத்தறிவு கொண்ட நாம் அதனை எந்த எவுக்குப் பயன்படுத்துகிறோம் என்பதை மனச்சாட்சியுடன் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுவே இறைவனின் குரல். இல்லாவிட்டால் அழிவையே நாம் அடைய நேரிடும். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு நாளும் ஏன் ஒவ்வொரு வினாடியும் மறந்துவிடலாகாது. "உன்னைத் திருத்து உலகம் திருந்தும்" என்பது நிகழ்ந்தால், உலகம் மகிழ்வு மிக்கதாகும். இவ்வாறு செயற்பட எம் சொந்தப் பலம் மட்டும் போதாது, செப வாழ்வும் வேண்டும்.

முன்பே கூறியதுபோல எம்மை நாம் முதலில் யார் என்றும் என்ன செய்யவேண்டும் என்பதையும் உணர்ந்துகொண்டால் எம் வாழ்வைத் திட்டமிடுவோம், செயற்படுவோம். எவராலும் எவரும் வலி, பாரம் அனுபவிக்க வேண்டியிராது. அப்போதுதான் உலகம் முறைப்பாடில்லா மகிழ்வுடன் திகழும்.




கங்காருவுக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது தெரியுமா? முதன்முதலில் ஆங்கிலேயர்கள் ஆஸ்திரேலியாவுக்குக் குடிவந்தபோது வினோதமான விலங்கொன்று அங்கே குதித்து ஓடிக்கொண்டிருந்ததைப் பார்த்தனர். அங்கிருந்த பழங்குடியினரிடம் அவற்றின் பெயர் என்னவென்று கேட்டனர். இவர்கள் கேட்டது அவர்களுக்குப் புரியாததால் 'கங்காரு' (அவர்கள் மொழியில் 'தெரியாது' என்று அர்த்தம்) என்றனர். அது முதல் கங்காருவுக்கு அந்தப் பெயரே நிலைத்துவிட்டது.

# 'கங்காரு' பெயர் வந்த விதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையில் எடு, செபமாலை எடு! ஜெபி ஜெபி! செபமாலை ஜெபி!

பல பக்தி முயற்சிகள் ஒரு மையத்தில் குவிதலே பக்தியாகும். மூவொரு இறைவன், இயேசுவின் தாயாம் அமலோற்பவ அன்னை மற்றும் புனிதர்கள் மட்டில் பயனுள்ள இனிய விசுவாசம், நம்பிக்கை, அன்பு, அர்ப்பணத்துடன் கூடிய உள்ளுணர்வே பக்தியெனப்படும். பக்திக்கு இலக்கான ஆட்களை நோக்கிச் சொல்லப்படும் செபங்கள், மேற்கொள்ளும் திருப்பயணம் போன்றவை பக்தி முயற்சிகள். இந்த வகையில் நம் தாய் மரியாவுக்கு என்று சிறப்பான விதத்தில் ஏற்பட்ட மிகவும் பரவலாக மக்களிடையே விளங்குவது செபமாலை.

பொன்னொளிரு மாலையினும் பூமணக்கு மாலையினும்
பின்னுநூல் மாலையினும் பிற்பகல்போய் துன்னுமிருள் மாலையினும்
ஆழ்பொருள்பா மாலையினும் மேல் செபமாலையெனக்கில்லை மறுப்பு
அன்பென்றும் இன்பமென்றும் அங்கிங்கலைத்துழன்றும்
துன்பமே காண்கின்ற தோழனே அன்போடெடுத்துனக்குக் கூறுகின்றேன்
இஃதொன்றைக் கையில் எடு செபமாலை எடு

ஏற்கனவே நொந்துபோயிருக்கும் நமதாண்டவரை இதற்குமேலும் நோகச் செய்யாதீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் நாளும் செபமாலை சொல்லி வரவேண்டும். இது பரிசுத்த அன்னையின் செய்தி. ஆன்மா தனைப் படைத்தவரான கடவுளுக்குப் பணிந்திருக்கவேண்டும். எதிரியினுடைய நரக நோக்கமே அனைத்து நல்லொழுக்க நெறிகளையும் உடைத்து அன்பாகவே இருக்கின்ற கடவுளுக்கு உரியதான அனைத்தையும் அழிப்பதற்காக பகையை மூட்டுவதே. கடவுளற்ற மனிதாபிமானம் எனும் கெடுதலான புற்றுநோய் உலகம் முழுவதையும் தொற்றிக்கொண்டுள்ளது. இந்தக் கொல்லும் விஷமாகிய போர், ஆட்கடத்தல், கொலை, கொள்ளை, வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம், ஊர் கடத்தல் (நாடு கடத்தல் போல்), முகவரி இல்லா அகதி வாழ்க்கை என்பவற்றின் தலையான பகையின் முன்பாக எப்போதும் கைவிடப்பட்டிருக்கிறவர்கள், அதனால் தாக்கப்படாதிருக்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டுமானால் நாம் முற்றிலுமாக நிபந்தனையற்ற நிலையில் அமலோற்பவ அன்னையிடம் நம்மை ஒப்படைத்து விடவேண்டும். நமது அன்னையின் விண்ணப்பங்களுக்குச் செவிகொடுங்கள். எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள குறைந் தபட்சமான கடமை தங்கள் வாழ்க்கையைத் திருத்துவதற்காக அயலவருடன் ஒற்றுமையாகவும் நிறை அன்புடனும் இறை பக்தியிலும் இடையறா செபத்திலும் இணைந்து வாழ்வதே.

செபமாலை இறைமக்களின் சமூக செபம் எனலாம். நாம் என்றுமே இறைவனைச் சார்ந்திருக் கவேண்டும். எனவே இறைதந்தையை அடை வதற்கு ஒப்பற்ற வழிகாட்டி தாய் மரியாதான். நமது குடும்பங்களில் செபமாலை சொல்வது தினசரி பக்தி முயற்சியாக இருத்தல் அவசியம். இது மானிட மீட்பின் சந்தோசம், துக்கம், மகிமை, ஒளி ஆகிய தேவ ரகசியங்களை நினைவுகூர்கின்றது. கற்றோரும் கல்லாதோரும் புரிந்துகொள்ளக்கூடிய பக்தி இது. நாம் செபமாலையைக் கட்டாயம் செபிக்க வேண்டும். இரட்சணியத் திருநிகழ்ச்சிகளின் வற்றாத களஞ்சியமாயிருக்கிறது பரிசுத்த செபமாலை. நம் வேதத்தின் முக்கியமான சத்தியங்கள் மரியாவிட மிருந்தும் மரியாவிலும், மரியாவுடனும், மரியாவின் வழியாகவுமே வருகின்றன. இந்த வேத சத்தியங் களை மாமரியை நோக்கியபடியே அறிகிறோம், ஏற்றுக் கொள்கிறோம், விசுவசிக்கிறோம், நேசிக்கிறோம். மாதா முழுமையாக நற்செய்தியைக் கொண்டிருந்தார்.

இறைவழிபாட்டின் நிகரற்ற செயல் நற்கரு ணைப் பலி திருவருட்சாதனங்களின் வழியாக இயேசு நமக்குத் தருவதையெல்லாம் மாதா செப மாலை வழியாக ஞான முறையில் நமக்குத் தரு கிறார்கள். திருப்பலிக்கு அடுத்தபடியாக வைத்து நாம் காணக்கூடிய மிகச்சிறந்த வழிபாட்டுச் செயல் செபமாலைதான். மரியாவுக்கும் மிக விருப்பமான செபம் செபமாலையே. தேவ மகத்துவத்துக்கெதிரான பாவங்களுக்குப் பரிகாரம் செய்யும் மிக ஆற்ற லுள்ள செபம் செபமாலையே. தனி மனித னையும், குடும்பத்தையும், தேசத்தையும், உலகத்தையும் அழிக்கத் தேடும் வருந் தத்தக்க தீமைகளை நிவர்த்திப்பதும் செபமாலைதான். இறைமக்களின் சமூக செபம் என்பதனால் எல்லோரும் பங் கேற்று ஒன்றாக இணைக்கப்படுகின் றனர்.

செபமாலை சொல்வது ஒரு சிறந்த பக்தி. அதில் இயேசுவின் வாழ்க்கையும் மரியா வின் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்து இழையோடிக்கொண்டி ருக்கின்றன. செபமா லையை எடுத்து அதைப் பயனுறச் செபிக்க செபமாலை தேவ இரகசியங்கள் சந்தோச, துக்க, மகிமை, ஒளி என இருபது இருக்கின் றன. மரியன்னைக்குப் புகழ் சேர்க்கும் செபமாலை. அன்னையவள், கன்னியவள், ஆளும் அரசியுமாய் விண்ணோர் முடிபுனைந்து நிற்கும் காட்சியை நாம் கண்டு அம்மாட்சிமைக்குச் சாட்சிகளாய் மெய்மறந்து திளைக்கின்றோம்.

மரியன்னையிடம் மாறாத பக்தி கொண்டு இவ்வழகிய செபமாலைப் பக்தியில் நிலைத்திருப் பவர்கள் அன்னையைப்போல் பேயின் சோதனை களை விரட்டி அதை அடித்துத் துரத்தும் சக்தியி னைப் பெறுவர். மரியன்னையின் மாசறு வாழ்வை, மறுவில்லா மாண்பை, தாய்மையை, கன்னிமையை, மகிமையை, கருணையை உணர்பவர்களாவோம்.

**எமது உள்ளங்களுக்கு நிம்மதியை, சமாதானத்தை, நிறைவைத் தருவது செபமாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியா மூலம் நாம் அடையும் இறையருளுக்கு ஈடு இணை எதுவுமில்லை. அது இடையறாது நமக்குப் பொழிந்துகொண்டேயிருக்க வேண்டும். ஐம்புலன் களை அடக்கியாளவும் புலன் வழி ஏற்படும் தீயவை களுக்கு மருந்தாகவும் திகழும். எனவே இதை நாம் புரிந்துகொண்டு ஓயாமல் செபமாலை செபிக்க வேண்டும். மரியா எத்தனை திருத்தலங்களில் மகிமைப்படுத்தப்பட்டாலும் அவற்றையெல்லாம்விட ஒரு மேலான திருத்தலமாக இருக்கவேண்டியது நமது உள்ளமே.

செபமாலை செபிக்கும்பொழுது நாம் ஆண்டவர் இயேசுவின் பிறப்பிலிருந்து அவரது வாழ்க்கை, போதனை வழியாக கல்வாரியில் அவரது மரணத்திற்கும் உயிர்ப்புக்கும் இட்டுச்செல்லும் பயணத்தை மரியன்னையின் பாதுகாவலில் செய்கிறோம். நமக்கு மீட்பரைத் தந்த மரியன்னை கற்றுத்தந்த மாலையினைத் தொடர்ந்து செபிக்கும்பொழுது ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கைப் பாதையைச் சிந்திக்க வைக்கிறது. புதிய ஏற்பாட்டின் அத்தனை போதனைகளையும் சுருக்கமாக தன்னகத்தே கொண்டுள்ளது. மரியன்னையோடு இணைந்து இறைவனுக்கு நன்றி கூறும் கீதமாகிறது. இயேசுவிடம் இருந்து மரியா மூலம் எமக்கு அருளைப் பெற்றுத் தருகின்றது. எனவே, எமது ஆன்மீக வாழ்வில் முக்கிய இடம் பெற்றுள்ளது என்பதால் இயேசுவுடன் நம்மை இணைப்பது செபமாலையே. தனிப்படவும் குடும்பங்கள், நாடுகள், உலகம் ஆகிய அனைத்துத் தேவைகளுக்காகவும் செய்யக்கூய செபம் செபமாலையே. எமது உள்ளங்களுக்கு நிம்மதியை, சமாதானத்தை, நிறைவைத் தந்து கவலை, கஷ்டம், துன்பம் இவற்றை விரட்டி விலக வைப்பது செபமாலை. சமுதாயத்தில் நலிந்து கிடக்கும் தீமைகளை வேரறுக்க உதவும் வல்லமையுள்ள ஆயுதம் செபமாலை. திருவழிபாட்டுக்கு முன்னுரைபோல் அமைவது செபமாலை.

**– திருமதி. எம். மனுவல் –**

6ம் பக்கத் தொடர்ச்சி...

மத்தியிலும், நோய்கள், கடன் தொல்லைகள், எதிர் பார்க்காப் பிரச்சினைகள் மத்தியிலும் இறைவனின் அன்பை நாம் சுவைக்கவேண்டும்.

தண்ணீரிலே மிதக்கின்ற தாமரை தண்ணீரினால் மூழ்கடிக்கப்படுவதில்லை. யோபுவைப் போன்று எமது வாழ்வில் எந்தத் துன்பங்களை நாம் சந்திக்க நேர்ந்தாலும் 'எல்லாம் கடந்துபோகும்' என்று அமைதியாக இருக்க முனைவோம். எந்தத் துன்பத்திலும் இறைவன் எம்மைக் கைவிடமாட்டார் என்ற அசையாத நம்பிக்கையோடு இறைவனைப் பற்றிப் பிடித்துக்கொள்வோம்.

புனிதர்களின் வாழ்வு, வேத சாட்சிகளின் வாழ்வு மேல்வரிச்சட்டமாக, முன்னுதாரணமாக விளங்குகிறது. கிறிஸ்துவுக்காக நாம் எதையும் செய்வோம், கிறிஸ்துவுக்காக நாம் எத்துன்பத்தையும் ஏற்றுக்கொள்வோம் என்று இவர்கள் வாழ்ந்து தங்கள் வாழ்வினால் சாட்சியம் பகர்ந்தவர்கள்.

நாமும் வெறும் வார்த்தைகளினால் மாத்திரம் சாட்சியம் பகராது எந்தத் துன்பங்களை நாம் சந்திக்க நேர்ந்தாலும் எல்லாம் இறைவனின் திட்டம், எல்லாம் இறைவனின் திருவுளம் என்று அந்தத் துன்பங்களுக்கு முகம் கொடுத்து அந்தத் துன்ப வேளையிலும் இறைவனுக்கு அர்ச்சனை செய்து இறைவனை அண்டி வாழ முனைவோம்.

**– அருள்தந்தை. C. V. அன்னதாஸ் –**




## குறும்(புப்)பா - 9

வானத்தில் சமாதான(?) முழக்கம்
வருகையில் குழிக்குள்ளே முடக்கம்
ஈனத்தில் ஒலிக்கின்ற குரலுக்கு மனிதாபி
மானத்தின் பரிசென்று விளக்கம்

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




'மட்டக்களப்பு வாசகர் வட்டம்' வெளியீடு செய்த 'மட்டக்களப்பும் பேராசிரியர் சிவத்தம்பியும்' என்னும் பேராசிரியர் சிவத்தம்பியின் பவளவிழா மலர் எமது பார்வைக்குக் கிடைத்தது. உண்மையில் கௌரவிக்கப்படவேண்டிய பெரிய மனிதர் அவர். மட்டக்களப்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் உறவுப் பாலமாக விளங்கியவர்.


கிலப் பத்திரகையாளரான ஆனந்த பாலகிருட்டினர், பட்லி, கருப்புராஜா போன்ற நாவல்களை எழுதிய நேசன் உட்பட இன்னும் சிலரும் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் இப்பாசறையை இன்று மறந்திருக்கக்கூடும். ஆனால் எம்மால் மறக்க இயலவில்லை. அப்பெரிய மனிதரின் மனமும் பெரியதுதான்; பண்பும் பெரியதுதான். இப்படிப்பட்ட மனிதரைக் கௌரவித்த மட்டக்களப்பு வாசகர் வட்டம் கட்டாயம் போற்றப்பட வேண்டியது. பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் தனது உரையில் 'பேராசிரியர் கா.சிவத்தம்பியின் மட்டக்களப்புடனான உறவுகள்' என்னும் தலைப்பில் அருமையான விடயங்களைக் கூறியுள்ளார். மட்டக்களப்பின் கூத்துக் கலையை வெளியுலகுக்குக் கொண்டுவந்து புகழ் பரப்பக் காரணமாயிருந்த பேரா.கா.சிவத்தம்பி ஐயாவின் வகிபாகங்கள் பற்றி எமக்கு விளக்கி நிற்கின்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

# பேராசிரியர் கா. சிவத்தம்பி

பேராசிரியர் அவர்களை நான் முதன்முதலில் 1983ம் ஆண்டு யூலை மாதம் கண்டேன். ஆடிக் கலவரம் தொடங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் பிலியந்தலயில் நடைபெற்ற ஒரு பயிற்சிப் பட்டறையில்தான் அவரைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. தமிழ்ப் பத்திரிகையாளருக்கான ஒரு பாசறைதான் அது. ஒரு சர்வதேச கத்தோலிக்க அமைப்பு 'கத்தலிக் மெசஞ்சர்' என்ற ஆங்கிலப் பத்திரிகையுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த அந்தப் பயிற்சிப் பட்டறையின் இயக்குனராக 'தினகரன்' பிரதம ஆசிரியராக இருந்த திரு.ரி.சிவகுருநாதன் கடமை புரிந்தார். பேராசிரியர் எஸ்.தில்லைநாதன் (அப்போது பேராதனையில் இளம் விரிவுரையாளர்), பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் வளவாளர் களாக இருந்தனர். என்னுடன் சேர்த்து மட்டக்களப்பில் இருந்து என்.லோகநாதன், இ.இரத்தினகுமார் (தற்போது செங்கலடிப் பகுதியில் கிராம சேவையாளர்), ஜெனற் ரீச்சர் ஆகியோரும் தற்போதைய பிரபல ஆங்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வளர்ச்சிக்கு அவர் செய்த பணிகளையும் அது சொல்கின்றது.

அவரது பவள விழாவையொட்டி மட்டக்களப்பு வாசகர் வட்டத்திற்கு அவர் எழுதிய கடிதத்தை அப்படியே தருகின்றோம். மலரில் இக்கடிதம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. வாசகர் வட்டத்திற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு மடலைப் பார்ப்போம்.

'வாசகர் வட்டம் எனது 75வது நிறைவையொட்டி ஒரு ஒருங்குகூடலை நடாத்துகின்றது என்பது எனக்கு மனம் நிறைந்த திருப்தியைத் தருகின்றது.

வாசகர் வட்டத்தின் தெரிவு வட்டத்திற்குள் நான் வருகின்றேன் என்பதனை எனக்குள் நானே நினைத்துச் சற்றுப் பெருமிதப்பட்டுக்கொள்கின்றேன் என்று கூடச் சொல்லலாம். காரணம் தெளிவும், இறுக்கமும் கொண்ட அவர்களது இலக்கிய அபிப்பிராயங்கள் பற்றிய ஒரு மௌன வியப்புண்டு.

வாசகர் வட்டம் இன்னொரு வகையில் எனக்குப் பவித்திரமானது. சிவராம், வாசகர் வட்ட நிறுவன அங்கத்தவர்களிலொருவன். வாசகர் வட்டத்தின் இலக்கியச் செயற்பாட்டுச் செம்மை பற்றியும், அதனுடைய சிறப்புப் பற்றியும் அவனுக்கு நிறைந்த பெருமித உணர்ச்சி இருந்தது. சிவராம் இருக்கும் வரையும் என்னுடைய எழுத்துகள் பற்றி நிறைய விவாதிப்போம். ஆனால், வாய்விட்டு இது நல்லது என்று எதனையும் சொல்வதில்லை. சொல்லமாட்டானா என்று நான் பல தடவைகளில் ஆதங்கப்பட்டதுண்டு. இப்பொழுது வாசகர் வட்டம் செய்யும் இந்தக் கௌரவத்தை அவன் செய்வதாகவே நினைத்துக்கொள்கின்றேன்'




## உங்களுக்குத் தெரியுமா?

கொடி ஒன்று ஏற்றப்பட்டதிலிருந்து கீழே இறக்கப்படாமல் கம்பத்தில் பறந்தவாறே இருக்கிறது. அது எந்த இடத்தில் இருக்கிறது தெரியுமா?

நிலாவில்!

## குழந்தை

கள்ளமில்லா உன் புன்னகையில் கவலைகள்
நான் மறந்தேன்
காலமெல்லாம் உன் நினைவில் கன்னியாய்
நான் வாழ்ந்திடுவேன்
கனியமுதே கண்மணியே நீ தாயில்லாக்
குழந்தைச் செல்வம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தால் தே நுழைந்திட...

**போ**ரின் தாக்கத்தினால் சமூக மற்றும் பண்பாடு சார் மாற்றங்களை குறிப் பாகச் சமூக பண்பாடுசார் ஒழுங்கமை வின்மைகளை ஏற்படுத்தியுள்ளது.

போரினால் இளம்பெண்கள் விதவைகளாக் கப்படுதல், ஆட்கடத்தல், பலவந்தமாகக் காணாமற் போதல், ஆயுதக் கலாசாரம் என்பவற்றால் பல பெண்கள் கணவரை இழந்து தவிக்கின்றனர். யாழ் பிரதேச செயலகப் புள்ளி விபரத் திணைக்களம் 2005 வெளியிட்ட அறிக்கையில் 2004-2005 ஆண்டுகளில் யாழ் மாவட்டத்தில் 24,706 விதவைகள் உள்ளனர் என அறிக்கை செய்துள்ளது. இதைப்போல வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரக்கணக்கான விதவைகள் உருவாக்கப்பட்டுள்ளனர் இளம் விதவைகள் பல்வேறு பாலியல் வல்லுறவுக ளுக்கு உட்படுகின்றார்கள், வறுமையும் அவர்களை கபளீகரம் செய்கின்றது. அதேநேரம் இளம் விதவை களுக்குப் பாலியல் சார்ந்த தேவைகளும் இருக் கின்றன .இதனால் தவறான வழிகளைத் தெரிவு செய்து வாழ்வைச் சிதைப்பவர்களும் உண்டு. இங்கு பண்பாடு சார் பிரச்சினைகள், பொருளாதாரம் சார் பிரச்சனைகள் என்பன அதிகரித்து இவர்களை உள ரீதியாகவும் பாதிக்கின்றது.

வன்செயலினால் அதிகளவு ஆண்கள் கொல்லப்படுகின்றர்கள். இதனால் இளம் ஆண்கள் குறைந்து செல்கின்றார்கள். அதன் காரணத்தால் முதிர் கன்னிகளின் பெருக்கம் அதிகரிக்கின்றது. பெண்களை வைத்திருக்கும் பெற்றோர் வயிற்றில் நெருப்பைக்கட்டி வைத்திருப்பது போல தற்கால நிகழ் வுகள் அமைகின்றன. ஏனெனில் சீதனக்கொடுமை பெருகியுள்ளது.

> “இலங்கையில் இருபது மாதக் காலத்தில் 1000 பேரைக் காணவில்லை”
> - பிராஸ் பலோனி -

இன்று இருப்போரை நாளை காண முடியாத அளவுக்குக் கடத்தப்படும் நபர்களின் தொகையும் நாளுக்கு நாள் பெருகிச் செல்கின்றது. இதனால் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வியலை நடத்த வேண்டி யுள்ளது. அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் பிராஸ் பலோனி என்பவர் “இலங்கையில் இருபது மாதகாலத்தில் ஆயிரம் பேரைக்காணவில்லை” (தினக்குரல் 05.08.2007) என அமெரிக்க பாராளு மன்ற வெளிவிவகாரக் குழுவிடம் முறைப்பாடு செய் துள்ளார். புள்ளி விபரத்துக்குள் உள்ளடங்காமல் காணாமற்போனோர் ஏராளம். அவர்கள் எலும்புக் கூடுகளாகவும் அடையாளம் தெரியாத பிணங்க ளாகவும் வெளிவரும் சம்பவங்களும் ஏராளம்.


பயங்கரவாதச் சட்டத்தின்கீழ் அநீதியாகக் கைது செய்யப்படுவோரும் உண்டு. இலங்கையில் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், போக்கு வரத்துச் சுதந்திரம் வாழ்வைத் தீர்மானிக்கும் சுதந்திரம் எதுவும் இல்லாத நிலையிலேயே இலங்கை வாழ் மக்கள் காணப்படுகின்றனர். இந்த அவலத்தின் வெளிப்பாடுகளாக மௌன கலாசாரம் பெருகியுள்ளது. நீதி காக்கவும் குரல் கொடுக்கவும் யாரும் இல்லை. உண்மைக்காகவும் நீதிக்காகவும் செயல்படுகின்றவர் இறைவன். திருச்சபை இறைவனின் பிரதிநிதியாக இருப்பதனால் உண்மைக்காகவும் நீதிக்காகவும் குரல் கொடுக்க வேண்டும். திருச்சபையின்குரல் வலிமை கொண்டது. இந்தக்குரல் ஓங்கி ஒலிக்கின்றபோது முழுச் சமூகத்தையும் அநீதியிலிருந்து விடுவித்து புதுயுகத்துக்குள் அழைத்துச்செல்லும்.

**- யாழ் ராதவல்லி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த இதழ் தொடர்ச்சி...

**சாரணிய இயக்கத்தில் மிக நீண்டகால அனுபவம் உடையவர் என்றும் அதற்காகப் பதக்கம் பெற்றதாகவும் குறிப்பிட்டிருந்தீர்கள். இது பற்றிய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளலாமா?**

ஆரோக்கியநாதர் என்பவர் எமக்குச் சாரணியத்தை அறிமுகப்படுத்தினார். பல்வேறு பதக்கங்களைப் பெற வழிகாட்டினார். சைக்கிள் பதக்கம் பெற நாம் கோஷ்டியாகத் திருமலையிலிருந்து மட்டக்களப்பிற்கு கிண்ணியா உப்பாறு, வெருகல், வாகரை வழியாகச் சென்று மீண்டும் அதே பாதையால் வந்து பதக்கம் பெற்றோம். ஏழு மைல்களுக்கு அப்பால் இருந்த கன்னியா என்னுமிடத்துக்குக் கால்நடையாகச் சென்று இருநாள் பாசறை அமைத்து அதன் மூலம் விசேட பதக்கத்தைப் பெற்றுக்கொண்டோம். அப்போது திருகோணமலைக் கடற்படைத்தளம் பிரிட்டிஸார் வசம் இருந்தபோது அவர்களின் நிர்வாகத்திலிருந்த தீயணைப்புப் படையின் உதவியுடன் பயிற்சி பெற்றுத் தீயணைப்புப் பதக்கத்தையும், நீச்சல் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டோம். பண்டாரவளையில் கற்பித்துக்கொண்டிருந்த காலத்தில் அப்பகுதி சாரண மாணவர்களின் தேவை கருதி 'இளம் பாதன்' (TENDER FOOT) என்னும் நூலை வெளியிடக் கிடைத்தது; மகிழ்ச்சியான நினைவு. மிக நீண்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் திருமலையில் சாரணியம் புதுப்பிக்கப்பட்ட போது பலரின் வேண்டுகோளுக்கிணங்க என்னால் தொகுக்கப்பட்ட 'கனிஷ்ட சாரணியம்' என்னும் நூல் திருமலை கலை இலக்கிய வட்டத்தின் சார்பில் நண்பர் சசி மாஸ்டர் வெளியிட்டு உதவினார்.

முன்னர் குறிப்பிட்டதுபோல் புனித சூசையப்பர் கல்லூரி தனது குழுவின் எண்பதாவது ஆண்டு நிறைவைக் குறித்து விசேட பாசறை ஒன்றை நடாத்தினார்கள். அதில் இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து சாரணக் குழுக்களுடன் வெளி மாவட்டங்களிலிருந்தும் பல குழுக்கள் பங்குகொண்டன. இதன்போது திருமலை மாவட்டத்தில் மிக நீண்டகாலமாகச் சாரணியத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த பலர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அவ்வாறு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்களுள் நானும் ஒருவன்.

*சாரணியத்தில் இவ்வளவு ஈடுபாடு உங்களுக்கு இருக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு கதாசிரியர் என்ற நிலையிலேயே உங்களை நேர்காண விழைந்தேன். ஆயினும் இன்று ஒரு கதாசிரியரை, நாவலாசிரியரை, ஓவியரை, நாடக ஆசிரியரை, கவிஞரை, சாரணராளரை, நடிகரை ஒருமித்து ஒரே இடத்தில் சந்திக்கக் கிடைத்ததில் மகழ்ச்சி அடைகிறேன். 'தொண்டன்' வாசகர் சார்பில் எனது நன்றியையும் வணக்கத்தையும் கூறிக்கொள்கின்றேன்.*

நீங்கள் எவ்வாறு கருதிக்கொண்டாலும் என்னை ஒரு சாதாரண வாசகனாகவே கருதுகிறேன். என்னை நேர்கண்டு எனது மன விருப்புகளை வாசகர்களோடு பகிர்ந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கும் தொண்டனுக்கும் எனது பணிவான வணக்கம்.

- ஆழியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித பிரான்சிஸ் அசிசி

கி.பி. 1182ம் வருடம் இத்தாலி நாட்டு அசிசி பட்டினத்தில் செல்வந்தக் குடும்பத்தில் பிறந்த பிரான்சிஸ் சிறுபராயம் தொட்டுக் கல்வியில் சிறந்து விளங்கினார். பாட்டுப் பாடுவதிலும் இயற்கை அழகை இரசிப்பதிலும் ஆர்வம் காட்டினார். 19 வயதானபோது நாட்டில் யுத்தம் ஏற்பட்டதன் காரணமாக படையில் சேர்ந்தார். எதிரிகளால் சிறை பிடிக்கப்பட்டு பின் விடுதலை ஆனார். அசிசி சென்றார். அங்கு இறைவனின் அழைப்புக்குச் செவிமடுத்தார். தகர்ந்து இடிந்து கிடந்த திருச்சபைக்குப் புத்துயிரூட்டும் பணியில் ஈடுபட, தந்தை விடாமல் தடுத்தார். எனவே, தமது செல்வ சுகபோக வாழ்வைத் துறந்து இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்தார். திருச்சபை இக்கால கட்டத்தில் பதவிப் பேராசை, சுகபோக வாழ்வு போன்றவற்றிலிருந்து விலகி லௌகீக வாழ்வில் ஆழ்ந்திருந்து. இந்நிலையிலிருந்து திருச்சபையை விலக்கி உன்னத நிலை பெறச் செய்யவே இறைவன் அவரை அழைத்தார். எளிமையாக வாழ்ந்த பிரான்சிஸ் இயற்கையில் இறைவனை அனுபவித்து மகிழ்ந்தார். திருச்சபையை மெல்ல வேறுபாதைக்குத் திருப்பினார். துறவற வாழ்வுக்குப் புத்துயிர் அளித்தார். கீழ்ப்படிவு, ஏழ்மை, கற்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு துறவறச்சபையை உருவாக்கினார். கபில நிற ஆடையணிந்து இடையில் கயிறு கட்டிக்கொண்டார். பாடல்களைப் பாடிக்கொண்டே சமாதானத்தையும் அன்பையும் பரப்பியவண்ணம் பணிபுரிந்த அவரது சமாதானச் செபம் மிகவும் பிரபல்யமானதாகும்.





பாடசாலை மாணவர்களாகிய நீங்கள் திருச்சபையின் வளர்ச்சிக்கு உங்கள் பங்களிப்பைச் செய்யவேண்டும். திருப்பாலத்துவ சபையில் சேரலாம். படைப்பை மதித்து விருத்திசெய்ய முன்வர வேண்டும். ஆன்மீகத்தை வளர்ப்பதில் ஈடுபட வேண்டும். சிறு கருமத்தையும் கவனத்துடன் செய்ய வேண்டும்.

"உண்மை என்பது அழிந்துவிடாது. அது தெய்வத்தின் மொழியாகும். நன்மை என்பது நாளை வருகின்ற நம்பிக்கை மொழியாகும்"

– B.ஜோன் விவின்ஸ் பன்ரோய் பெல்சியன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகம் கேட்காத பழமொழிகள்

- ❖ நாய் விற்ற காசு குரைக்குமா?
- ❖ பாட்டு வாய்த்தால் கிழவியும் பாடுவாள்.
- ❖ பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை.
- ❖ மாமி உடைத்தால் மட்குடம், மருமகள் உடைத்தால் பொற்குடம்.
- ❖ வழுவழுத்த உறவிலும், வைரங்கொண்ட பகை நன்று.
- ❖ ஊண்டக்கொடுத்த பொல் உச்சியைப் பொக்குது.
- ❖ துறவிக்கு வேந்தன் துரும்பு.
- ❖ காணி வித்த காசு காவடியாடுது.
- ❖ குதிரையோடு சேர்ந்த கழுதையும் விரைவாய் ஓடும்.
- ❖ புண்ணியத்துக்கு உழுத மாட்டை பல்லுக்குப் பதம்பார்த்தானாம்.
- ❖ அகப்பை பிடிப்பவன் நம்மாளாக இருந்தால் அடிப்பந்தியில் இருந்தென்ன நுணிப்பந்தியில் இருந்தென்ன?
- ❖ சேற்றில் விழுந்த யானையை தவளையும் எட்டி உதைக்கும்.
- ❖ சுடர் விளக்கானாலும், தூண்டு கோல் ஒன்று வேண்டும்.
- ❖ மழைக்காலம் என்றாலும் மந்தி கொப்பிளக்கப் பாயாது.
- ❖ கடும் சினேகம் கண்ணைக் கெடுக்கும்.
- ❖ பசித்தாலும் புலி புல்லுத் தின்னாது.

தொகுப்பு: A. சந்திரசேகரம்


## இழிவு படுத்தாதே

மாதர் தம்மை இழிவு செய்யும் மடைமையைக்
கொளுத்துவோம்
தாதர் எண்றெண்ணிக் கோடித் தடைகள்
சொல்கிறார்
பாரதியின் பாடல்களின் பயன் எங்கும்
கண்டதில்லை
பாஞ்சாலிகளை விழிகளாலே விழுங்கித்
துகிலுரியும்
துச்சாதனனையும் துரியோதனனையும்
முன்னர்
தீர்க்கதரிசனமாய்க் கூறிவைத்தான்போலும் பாரதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கிறிஸ்தவ சமூகத்தில் கூட்டுறவும் ஒற்றுமையும்

ஒரு சமூகத்திற்கு நல்ல உறவும் ஒற்றுமையும் புரிந்துணர்வும் அவசியம். இத்கைய உறவு ஆதிகாலத் திருச்சபையில் இருந்தது. இது பலராலும் விரும்பப்பட்டும் பலருக்கும் முன்மாதிரிகையாகவும் இத்தகைய உறவானது நம்மால் ஏற்படுத்தப்பட்ட எல்லாச் சமூகங்களிலும் இருக்கவேண்டும் என்பதே பவுலின் எதிர்பார்ப்பாகும்.

எனவேதான், பவுல் கொரிந்தியத் திருச் சபைக்கு இவ்வொற்றுமை பற்றித் தெளிவாகக் குறிப் பிடுகிறார். அவர்களிடையே பல பிளவுகள் தோன்றி யிருந்தன. எனவே பிளவுகளற்றவர்களாய் ஒரே மனமும் ஒரே நோக்கமும் கொண்டு விளங்கும்படி குறிப்பிடுகிறார். இம்மக்கள் மத்தியிலே பவுலைச் சார்ந்தவர் என்றும் அப்பலோவைச் சார்ந்தவர் என்றும் கேபாவைச் சார்ந்தவர் என்றும் கிறிஸ்துவைச் சார்ந்தவர் என்றும் பல பிளவுகள் தோன்றியிருந்தன. இவ்விதமான பிளவுகளைத் தவிர்க்கும்படியும் கிறிஸ்து இத்தகைய பிளவுகளை ஏற்படுத்துபவர் அல்ல என்பதையும் விளக்குகிறார். பவுல் உங்க ளுக்காக இறக்கவில்லை. பவுலின் பெயராலும் நீங்கள் திருமுழுக்குப் பெறவில்லை. மேலும் கிறிஸ்துவிலே திருமுழுக்குப் பெற்ற நீங்கள் இப்பிளவுகளைத் தோற்று விக்கக் கூடாது என்கிறார்.

மேலும், கிறிஸ்து அருளும் ஒற்றுமை பற்றிக் குறிப்பிடுகையில் புற இனத்தவர்கள் கிறிஸ்துவை அறியுமுன் தூரத்தில் இருந்தனர். இஸ்ராயலரால் புறந்தள்ளப்பட்டு இருந்தனர்; அந்நியர்களாயும் கருதப் பட்டனர், எனினும் கிறிஸ்து சிந்திய இரத்தத்தால் அனைவரும் மீட்கப்பட்டனர். கிறிஸ்துவிற்கு அருகில் கொண்டுவரப்பட்டனர். நமக்கு அமைதி வருவது கிறிஸ்துவால் மட்டுமே. இவ்விரு இனத்தாரையும் பிரித்து நின்ற பகைமை எனும் சுவரைக் கிறிஸ்து தன் உடலில் ஏற்ற துன்பங்களினால் தகர்த்தெறிந்து விட்டார். பல கட்டளைகளையும் யூத சட்டங்க ளையும் அழித்து இரு இனத்தாரையும் தம்மோடு இணைத்து புதுப் படைப்பாய் மாற்றிவிட்டார். சிலு வையின் வழியாய் இரு இனத்தாரையும் கடவுளுடன் இணைக்கவே இவ்வாறு செய்தார். எனவே, கிறிஸ்து அருளிய இத்தகைய ஒப்புரவின் மூலம் இனி யாருமே அந்நியரல்ல. இறைமக்கள் சமூகத்தில் அனைவரும் சமமே எனக் கூறுகின்றார்.

இத்தகைய இறை சமூகமானது திருத்தூ தர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோரை அடித்தள மாகவும் கிறிஸ்து இயேசுவை மூலைக்கல்லாகவும் கொண்டு கட்டப்பட்ட உறுதியான கட்டிடமாகிய திருச்சபை, என்றும் ஒற்றுமையுடனும் நல்லுறவுடனும் இருக்கவேண்டும் எனக் கூறுகின்றார்.

மேலும், கிறிஸ்தவ ஒற்றுமையானது நாம் பெற்றுள்ள அழைப்பிற்கேற்ப விளங்கவேண்டும். முழுமனத் தாழ்மையுடனும் கனிவுடனும் பொறுமை யுடனும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கிக் கொள்ள வேண்டும். அமைதியுடன் இணைந்து வாழ்ந்து தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள வேண்டும். இத்தகைய எதிர்நோக் குகள் இருப்பதுபோல் உடலும் ஒன்றே, தூய ஆவியும் ஒன்றே, ஆண்டவரும் ஒன்றே, நமது நம்பிக்கையும் ஒன்றே, திருமுழுக்கும் ஒன்றே, எல்லோருக்கும் தந்தையும் கடவுளும் ஒருவரே. இதுவே கிறிஸ்து வுக்குள் நாம் பெறும் புது வாழ்வாகும். இவைகளின் மூலம் கிறிஸ்துவிலே காணப்பட்ட நிறைவைப் பெற்று நாமும் முதிர்ச்சியடையவேண்டும்.

எனவே, இனி நாம் குழந்தைகள்போல் இருந்து மனிதருடைய தந்திரங்களுக்கும் சூழ்ச்சிக ளுக்கும் ஏமாந்துபோகக் கூடாது எனவும், அவர்க ளின் தவறான போதனைகளை நம்பி அங்குமிங்கும் ஏமாந்து அலைக்கழிக்கப்படக்கூடாது எனவும் மாறாக உண்மை பேசி தலையாகிய கிறிஸ்துவின் ஒற்றுமையினை நம்மில் கொண்டும் வளரவேண்டும் எனவும் பவுல் குறிப்பிடுகிறார். எனவே, ஒவ்வொரு உறுப்பும் தன்னகத்தே குறிக்கப்பட்ட பணியினைச் செய்து உடலை வளர்ச்சியடையச் செய்வதுபோல் திருச்சபையில் உள்ள நாம் அனைவரும் கிறிஸ்து விலே இணைந்து சமூகத்தில் நல்லுறவும் ஒற்று மையும் ஏற்படச் செயற்படுவோம். நல்ல கிறிஸ்தவக் குடும்பத்தைக் கட்டியெழுப்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்?

வயலற் சந்திரசேகரம்



ஏன்? என்ற தலைப்பைப் பார்த்தும் ஏன் இந்த தலைப்பு என்று யோசிக்கத் தோன்றுகிறது இல்லையா?

ஏன்? என்ற கேள்வி இல்லாவிட்டால் இந்த உலகம் சகல துறைகளிலும் வளர்ச்சி கண்டிருக்கவே முடியாது. இருள் சூழ்ந்த இரவை ஏன் நான் ஒளிமயமாக்கக்குடாது? அன்று தோமஸ் அல்வா எடிசன் கேட்டிராவிட்டால் இன்றும் நாம் அரைவாசி வாழ்நாளை இருளில்தான் தொலைத்திருப்போம். றைட் சகோதரர்கள் ஏன் விண்ணிற் பறக்கமுடியாது? என்று கேட்டிராவிட்டால் நாம் அண்டவெளியில் பறந்திருப்போமா?

ஏற்றியுள்ளதை உணரலாம். சாள்ஸ் பபேஜ் கணினியை வடிவமைத்தார். அவரைத் தூண்டியதும் ஏன்? என்ற கேள்விதான்.

ஏன்? என்ற கேள்விகள் கேட்கப்படாதவிடத்து எந்த ஞானிகளோ, மேதைகளோ, விஞ்ஞானிகளோ, அறிவாளிகளோ உருவாகியிருக்கமுடியாது. ஏன்? என்று வினவுவதன் மூலமே அனேக விடைகள் பெறப்பட்டுள்ளது. அமெரிக்கரான பில்கேட்ஸ் "ஏன் நான் உலகப் பணக்காரனாக வரக்கூடாது?" என்று தன்னைத்தானே கேட்டதன் விளைவு தற்போது உலகின் அனேகமான கணினிகளின் இயங்குதள மென்பொருளான "வின்டோசை" (Microsoft Windows) கண்டுபிடித்து உலகப் பணக்காரர் ஆனார்.

எல்லா அறிஞர்கள், மேதைகள், விஞ்ஞானிகளின் முன்னேற்றத்திற்கும் வெற்றிகரமான சாதனைகளுக்கும் பச்சைக்கொடி காட்டியது இந்த ஏன்? என்ற கேள்விதான். அன்று ஆபிரகாம் லிங்கன் ஏன் நான் அமெரிக்க ஜனாதிபதியாக வரக்கூடாது? என தன்னைத்தான் கேள்வி கேட்டதன் விளைவு இரவற் புத்தகங்களை வாங்கிப் படித்து சட்டத்தரணியாகி பின்பு அமெரிக்க ஜனாதிபதி ஆனார். இங்கு மூலதனமே இல்லாதவர்கள் வாழ்வின் முதன்மையாளர்களாகச் சரித்திரம் படைக்க அடிப்படைக் காரணம் ஏன்? என்ற கேள்விதான்

ஏன் என்னால் இதைச்சாதிக்கமுடியாது? இன்று விஞ்ஞான சாதனைகள் வியக்க வைக்கின்றதே. அதன் பின்னணியைப் புரட்டிப் பார்த்தால் ஏன்? என்ற கேள்வியே இவர்களை ஆராய்ச்சி ஏணியில்

ஒரு மனிதனுள் அடங்கிக்கிடக்கும் மாபெரும் சக்தியை இனங்கண்டு சமூக முன்னேற்றத்திற்குப் பயன்படுத்த வேண்டுமானால் ஏன்? என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படவேண்டும். சிறு பிள்ளைகள் கூட உலகை அறிவதற்காக அடிக்கடி ஏன்? என்ற கேள்வியை அடுக்கிக்கொண்டே போவார்கள். அதற்கு சரியான விடை தெரியாத பெற்றோர் பிள்ளைகளை "ஏய் வாயை மூடு, கிழட்டுக்கதை கதைக்காத" என்று வாயை அடைப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் அச்சிறுவரது சிந்தனை ஆற்றலைச் சிதைத்து விடுகிறார்கள். இந்த இக்கட்டான நிலையை சமாளிக்கவேண்டுமானால் நீங்கள் விடாது வாசியுங்கள். அனேக அறிவு வர பிள்ளைகளின் கேள்விகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையைக்கூறி அவர்கள் மனதில் பெரும் மதிப் பைப்பெறுவீர்கள். அல்லாதவிடத்து நீங்கள் மடையர் களென்று பிள்ளைகள் உங்களை மட்டந்தட்டி விடுவார்கள். 'பியாஜே' என்ற கல்வி உளவியல் மேதை சொல்கிறார். மனிதன் படிப்பதை (வாசித் தறிவதை) எப்போது நிறுத்துகிறானோ அன்றே மனிதன் என்ற அந்தஸ்திலிருந்து விலகி விடுகிறான். அதாவது "மனிதனாக இருக்கவிரும்பினால் இறக்கும்வரை படி" என்பது பியாஜேயின் கூற்று.

ஏன் நான் மது அருந்துவதை விடக்கூடாது?
ஏன் நான் ஆவலாதி அவதூறு பேசுவதை விடக்கூடாது?
ஏன் நான் கோபத்தைக் குறைக்கக்கூடாது?
ஏன் நான் நன்றாகப் படிக்கக்கூடாது?
ஏன் நான் ஓர் அதிகாரியாகக்கூடாது?
ஏன் நான் ஓர் அறிஞராகக்கூடாது?
ஏன் நான் ஓர் எழுத்தாளராகக்கூடாது?

இப்படியே கேட்டால் நிச்சயம் அந்த இலக்கை அடையலாம். உனது சிந்தனை எப்படியோ அப்படியே உனது வாழ்க்கை. "கெலன்கெலர்" என்ற பிரபல்ய ஆங்கில எழுத்தாளருக்கு காது கேட்காது, கண் தெரியாது, பேச முடியாது. இருந்தும் எழுத்தாளராக ஏன் தான் வர முடியாது? என கேள்வி எழுப்பி விடா முயற்சியின் விளைவால் தன்னிகரில்லா எழுத்தாள ரானார். இவர் ஒரு பெண்மணி என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே குறைபாடுகளோ, வறுமையோ, தாழ்ந்த குலமோ, கோத்திரமோ ஒருவர் இலக்கை அடைந்து சாதனை செய்யத் தடையில்லை. எனவே ஏன்? என்ற கேள்வி மூலம் சகல அறியாமைகளுக்கும் பதில் காணமுடியும்.

இறுதியாக ஏன் இறைவன் உலகைப் படைத்தார்? மனிதன் அவற்றை அனுபவித்து இன்பம் பெற. அப்படியானால் ஏன் மனிதனைப் படைத்தார்?

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக் காக. மனுவைப் படைத்தான் தன்னை வணங்க"

ஏன் மனிதன் நினைப்பதெல்லாம் நடப்பதில்லை? மனிதன் ஒன்றும் தெய்வமில்லை என்பதால். இப்போது புரிகிறதா? ஏன்? என்ற இரண்டெழுத்தின் முக்கியத்துவம். ஏன்? என்ற கேள்வியை அடிக்கடி கேட்டு வாழ்வில் சாதனை படையுங்கள்.

## கடுகுக் கதை 9 காசு கரியானது

வெள்ளிக்கிழமை சாமிபடங்களுக்கு சாம் பிராணி போடுவதற்காக பாக்கியமக்கா சிரட் டையை அடுப்பில் வைத்து பற்றவைக்க செய்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தன. இதற் காக இனங்காணப்பட்ட இலக்குகள் மன்னிக் கவும் இனங்காணப்பட்ட காரணங்கள் மழையில் நனைந்த சிரட்டைகள்தான்.

பாக்கியமக்கா தனது இடுப்பு முடிச்சுக்குள் இருந்த ஐந்து ரூபாயை மகனிடம் கொடுத்து "ராசாட கடையில அஞ்சு ரூபாவுக்கு சிரட்டக்கரி வாங்கி வா" என்றாள்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சிதம்பரத்தார் (பாக்கியமக்காவின் அவர்) பெருமூச்சு விட்டவாறு சொன்னார்.



"கடக்கார ராசா கரியக் காசாக்குறான்... நாம காசக் கரியாக்குறம்..."

– பர்ரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும், இன்றைய தமிழர் சமூகமும்

ம. குமுதா (சிறப்புக் கலைமாணி கிறீஸ்தவம்)

அலகு – 3

## இன்றைய தமிழர் சமூகமும் கிறிஸ்தவத்தின் எதிர்பார்ப்பும்.



### ✣ பொதுச் சீர்கேடுகள்

தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் ஏனைய சில பிறழ்வுகளை நோக்குவோம். உயர்சாதி, இழிந்தசாதி எனும் பிளவுகளால் ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மனித மாண்பையும் உரிமைகளையும் இழந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் சமூக, அரசியல், பொருளாதார, மத அமைப்புகளால் கடைநிலைக்குத் தள்ளப்படுகின்றனர். கிறிஸ்தவ மதத்தில்கூட பழைய கிறிஸ்தவன், சக்கிலியக் கிறிஸ்தவன், வேளாளக் கிறிஸ்தவன் போன்ற பல பாகுபாடுகள் இருக்கின்றன.

சகுனம் பார்த்தல், குறிசொல்லுதல், சோதிட நம்பிக்கை போன்ற மூடநம்பிக்கைகள் மனிதனின் முயற்சிக்குத் தடைக்கல்லாகவும் அவனைப் பலவீனமானவனாகவும் ஆக்கிவிடுகின்றன. சீதன முறையானது எமது சமூகத்தில் வர்த்தக மயமாகியுள்ளது. இது இளம் பெண்கள், பெற்றோர் மத்தியில் மனோவியல் தத்துவங்களையும் சுமைகளையும் ஏற்படுத்தியுள்ளன. திருமணத்தின் பின் கூட சீதனப்பிரச்சனையால் விவாகரத்துகள், பிரிந்து வாழுதல், சித்திரவதை செய்தல், கொலை முயற்சிகள் என்பன விளைகின்றன.

தொடர்பு சாதனங்களில் ஒளிபரப்பாகும் விவாகரத்து, கருச்சிதைவு, ஓரினச் சேர்க்கை போன்ற மாறுபாடான கருத்துகளால் குடும்ப வாழ்க்கை சிதைவடையவும் சமூகச் சீர்கேடுகள் வளரவும் வழியேற்படுகின்றது. பத்திரிகை, வானொலி, சஞ்சிகை போன்றனவும் சினிமாவை மூலமாகக் கொண்டு செயற்படும்போது அவை சமூக சிரழிவிற்கு இட்டுச் செல்கின்றன. பலாத்காரம், வறுமை, பெண் உயிருக்கு ஆபத்து போன்ற பல காரணங்களால் கருவழிப்புக்கள் இடம்பெறுகின்றன. இதன்மத்தியில் "குளோனிங்" எனப்படும் செயற்கைமுறை உயிரினத் தோற்றமும் மனித மாண்பை இழிவுபடுத்தும் செயலாக அமைந்து வருகின்றது. புனிதமான தாம்பத்திய உறவினால் தோற்றுவிக்கப்படவேண்டிய மனித உயிர் தயாரிக்கப்படுவது வருந்தத்தக்க விடயமாகும். இவை இன்றைய தமிழர் சமூகத்தில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளாகும்.

### 3.2 சமூகம் பற்றிய கிறிஸ்தவத்தின் எதிர்பார்ப்பு

இன்று வீட்டிலும் சரி நாட்டிலும் சரி பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சகோதர உரையாடலை கிறிஸ்தவம் முன்வைக்கின்றது. ஒருவர் மற்றொருவரோடு கொள்ளும் தொடர்பாடலும் ஒருவர் ஒருவருக்கான கடமைகளை ஆற்றுவதாலும் சகோதர உரையாடலும் சமூகப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட வழியேற்படுகின்றது. 2ம் வத்திக்கான் சங்க ஏடு, "சமூக அமைப்பு நாளும் வளர வேண்டும்; உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும்; அன்பால் உயிரோட்டம் பெறவேண்டும்; மேலும், சுதந்திரத்தின் வழியாக மென்மேலும் அதிக அளவில் மனித மாண்பு துலங்குகின்ற ஒரு சமன்பாட்டு நிலையை அது கண்டடையவேண்டும்" எனக்கூறுகின்றது.

மனிதரின் அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரையில் பால், இனம், நிறம், சமூக நிலை, மொழி, சமயம் ஆகியவை காரணமாகப் பாகுபாடு காட்டும் எந்த முறையும் அவை சமூகக் கட்டமைப்பிலிருந்து எழுந்தவையாயினும் வெறுத்து ஒதுக்கித் தள்ள வேண்டுமெனக் கிறிஸ்தவம் எதிர்பார்க்கின்றது. ஒவ்வொருவரும் தன்னலத்தைத் துறந்து சமூகத்தில் பொறுப்புணர்வுடன் செயற்பட விரும்புகின்றது. தொலைத்தொடர்பு சாதனங்களை, குறிப்பாக இளைஞர் - யுவதிகள் அறிவோடும் கட்டுப்பாடோடும் பயன்படுத்தும் போது மனித இனம் மிகுந்த நன்மையடையும் எனவும் நம்புகின்றது.

இவ்வாறாக நீதி, அன்பு, சமாதானம் நிறைந்த சமூகத்தையும் சமூகப் பிராணிகளையுமே கிறிஸ்தவம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றது. மாறாக இன்னும் காணப்படும் வன்முறைச் சமுதாயத்தை அல்ல என்பது தெளிவு.


– முற்றும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## ஹஸ்த பாதாங்குஸ்தாசனம்



1. விரிப்பின்மீது கால்களைச் சேர்த்து அமைதியாக நிற்கவும்.
2. வலது காலை மடக்காமல் மெதுவாக மேலே தூக்கி வயிற்றுக்கு முன்னால் கொண்டுவரவும்.
3. மெதுவாக வலது கையை நீட்டி வலது காலைப் பிடிக்கவும்.
4. இடது காலை வளைக்காமல் நேராக நிற்கவும். இடது கையை முதுகுக்குப் பின்னால் கொண்டு வரவும்.
5. பார்வை நேராக இருக்கவேண்டும்.
6. ஆசன நிலையில் இயல்பான மூச்சில் இருக்க வேண்டும்.
7. 10 முதல் 20 வினாடிகள் வரை செய்யலாம்.
8. மூன்று முறை செய்யவும்.
9. மாற்று ஆசனமாக வலது காலில் நின்று இடது காலைத் தூக்கி நீட்டிச் செய்யவும்.
10. பின் மெதுவாகக் கை கால்களைப் பிரித்து இயல்பு நிலைக்கு வந்து ஓய்வு எடுக்கவும்.

### இதனால் ஏற்படும் பலன்கள்

1. கால் முதல் தலை வரையுள்ள நரம்புகள், தசை நார்கள் பலம் பெறுகின்றன.
2. அடிக்கடி சோர்வு ஏற்படும் மாணவர்கள் இவ்வாச னத்தைச் செய்தால் நல்ல சுறுசுறுப்பைப் பெறு வார்கள்.
3. அனைத்து உடல் உறுப்புகளுக்கும் சீரான இரத்த ஓட்டம் கிடைக்கின்றது.
4. கால்கள், இடுப்பு, வயிறு, கழுத்து ஆகிய உறுப்புகள் உறுதி பெறுகின்றன.
5. மனஒருமைப்பாடு ஏற்படும்.

### தீரும் நோய்கள்

1. தலை வலி, சோம்பல் ஆகியவை நீங்கும்.
2. மூட்டு வலிகள், மூட்டு இணைப்பு வலிகள் மாயமாய் மறையும்.
3. முள்ளந்தண்டுக் கோளாறுகளைச் சரி செய்கின்றது.
4. சிறுநீரக உறுப்புகள், கழிவு உறுப்புகளில் ஏற்படும் நோய்கள் தீரும்.
5. தொப்பை குறைந்து இடை அழகு பெறும்.

### மாற்றாசனங்கள்

1. கால்களை மாற்றி செய்யவும்
2. தனூராசனம்
3. நின்ற தனூராசனம்


### குறிப்புகள்

1. கணுக்கால் வலி உள்ளவர்கள் இவ்வாசனத்தைச் செய்யக் கூடாது.
2. ஆரம்பத்தில் மேசைமேல் கால் வைத்துப் பழகலாம்.
3. முழங்கால் முட்டிகளை வளைக்கக் கூடாது.

**மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வும் கலையும் ஒன்றே. நாட்டுப்புற இலக்கியங்களிலும் இவற்றைக் காணலாம். இலங்கையில் எனது ஊரிற்கு அருகாமையிலுள்ள ஓர் ஊர் மருதமுனை. மருதமுனைக் கிராமத்தின் முன்னோடி, முதுகலை அறிஞன் ஆ.மு.சரிபுதீன் என்ற பேரறிஞன். அவர் இப்பகுதிக் கலைகளைப் பற்றி ஆராய்ந்துள்ளார். நாட்டுப் புறக் கவிதைகள் பற்றி நிறையவே எழுதியுள்ளார். அவரது கவிதைகள் ஈழத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளிலும் வாசிக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு ஒரு பாடல்; ஒரு விளக்கம்.

இளம் பெண்ணொருத்தி பூப்படைந்துவிட்டாள். சாதாரண விவசாயக் குடும்பம். கணவன் தூர இடத்தில் வயலில் இருக்கின் றான். மனைவி பக்கத்து வீட்டு ஆளிடம் செய்தி அனுப்புகிறாள். அந்தச் செய்தி நாகரீகமானது, உணர்ச்சியும் இரகசியமும் ததும் பியது.

"ஆதங்காக்கா ஆதங்காக்கா அவரைக் கண்டா
சொல்லிடுகா
பூவரசம் கன்னியொண்டு பூமலர்ந்து
இருக்குதெண்டு"

இங்கு இலக்கிய நயத்தின் சாரத்தைப் பார்க்கின்றோம். ஆ.உ.சரிபுதீன் ஹாஜியார் அவர்கள் விபுலானந்தர் அடிகளின் மாணவராவார். பேராசியர் Dr.க.சண்முகசுந்தரம் தமிழ்த்துறைத் தலைவர் சென்ஜோசப் கல்லூரி பெங்களூர். பின்வருமாறு எழுது கிறார் நாட்டுப்புற இலக்கியத்தில் செல்வாக்குப் பற்றி:

3வது பதிப்பு (1998)

நாட்டுப்புற இலக்கியங்கள் தொல்காப்பியர் காலம் முதல் தொடர்ந்து வாழ்ந்து வளர்ந்து வருகின்றன. இவ்வாறே நாட்டுப்புற இலக்கியங்களும், நாட்டுப்புற இலக்கியத்தில் நாட்டுப்புறச் செல்வாக்கும், நாட்டுப்புற இலக்கியத்தில் ஏட்டுப்புறச் செல்வாக்கும் மிகுந்துள்ளன. என்றாலும் இவை வேற்றுப்புற இலக்கியவகை அல்ல. ஒன்றிலொன்று கலந்து ஒன்றிலொன்று செல்வாக்குற்றவை.

**தொல்காப்பியத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு**

ஒவ்வொரு மொழியிலும் எழுத்துகள் தோன்றுவதற்கு முன்பு பாடல்களும், கதைகளும் தோன்றத் தொடங்கின. அவற்றில் சில பாடல் வடிவில் பாடப்பட்டன என்கிறார் திரு.நா.வாணமாமலை.

பழமொழி: பழமொழி புதுச் சொல் புதுமொழி என்கிறார் தொல் காப்பியர். (செய்யுள் 177)

விடுகதை: விடுகதையை தொல்காப்பியர் பிசி என்கிறார். அதை 3 வகையாக விளக்குறார்.

01. ஒப்பொடு உவந்த உவமத்து (செய்யுள் 176)
02. தோன்றுவது கிளத்த துணிவினது (செய்யுள் 176)

03. நொடியோடு புணர்ந்தது (செய்யுள் 165)

## சங்க இலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு

குறிஞ்சி
வள்ளுவி, தெள்விழி இடையிடை
பயிற்றிக்கிளை ஒப்பியும் (குறிஞ்சி 99101)

குறுந்தொகை பின்வருமாறு கூறுகின்றது
(நாட்டுப்பாடல்)

குறவர் தம் பெண்டிரோடு
வான் தூய் மீ மிசை அயரும் குரவை
(மலை 32021)

மலை படு கடாம்
அணந்தன உணரக்கூறி
வேலர் இண்ணியங் கணங்கம் பாடி
(நற்றினை 2221011)

நற்றினை - வேலன் பாடலைக் குறிக்கிறது
திணைக்குறு மகளின் இசைப்படு வல்லை
(மலை 342)

இவ்வாறு முல்லை நில, மருத நில, பாலை நில நாட்டுப்புறப் பாடல்கள் சங்க இலக்கியங்களில் பரந்து காணப்படுகின்றன. கலித்தொகையிலும் நிறையவே நாட்டுப்புறப் பாடல்கள் வருகின்றன. சங்க இலக்கியங்களில் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்களுக்கும் இன்றைய நாட்டுப்புறப் பாடல்களுக்கும் அமைப்புகளில் வேறுபாடு உண்டு எனப் பேராசிரியர் சண்முகசுந்தரம் அவர்கள் கூறுகின்றார்கள்.

நாட்டுப்புற இலக்கியம் பற்றி அ. ஆறுமுகம்M.A அவர்கள் ஏழுதிய நூலில் நாட்டுப்புற இலக்கியங்கள் பின்வருமாறு கூறுகின்றது என்கிறார். நாகரீகம் சென்றடையாத கிராமப்புறப் பகுதிகளையே நாட்டுப்புறம் என அழைக்கின்றோம். சிற்றூர்களே நாட்டுப்புறம் எனப் பெயர் பெற்றிருந்தன. நாட்டுப்புற இசைக்கு மனிதன் இசைத்து ஒலித்த காலத்தைத் தான் கூறுவேண்டும் என்கிறார் கலாநிதி அ. ஆறுமுகம் அவர்கள்.

**தொல்காப்பியம் பின்வருமாறு கூறுகின்றது**

"பாட்டு உரை நூலே வாய்மொழி பிசியே அங்கதம் முது சொல்லே அவ்வேழ் நிலத்தும் வண் புகழ் மூவர் தன்பொழில் வரைப்பின் நாற்பேரெல்லை அகத்தவர் வழங்கும் யாப்பின் வழியது என்மனார் புலவர்" (செய் 79)

சங்க இலக்கியத்தை நன்கு ஆய்வு செய்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் தமது "தமிழர் சால்பு" என்ற நூலில் 261ம் பக்கத்திலிருந்து எழுதியவைகள் பயன் தருகின்றன. சங்க காலத்தில் சிற்பக் கலையும் ஓவியக் கலையும் வளர்ச்சி பெற்றிருந்தன. கோவில்களையும் அரசர் மாளிகைகளையும் மண்டபங்களையும் சிற்ப நூல் வல்லுணர்கள் நாள் குறித்து நாளிகை பார்த்து நேரடிக் காயி இட்டு திசைகளையும் அத்திசைகளுக்குரிய தெய்வங்களையும் இட்டு வகுத்தனர் (தமிழர் சால்பு, புறநானூறு உ.உ.கூ 1222).

**நடனம்**

சங்க காலப் பகுதியில் நடனமும் இசையும் மிக்க வளர்ச்சியைப் பெற்றிருந்தன. நடனத்தைக் குறிப்பதற்குப் பெரும்பாலும் கூத்து, ஆடல் என்ற சொற்களை வழங்கினர்.

தமிழருக்கு சிறப்பான வழிபாட்டு முறைகளைப் பற்றிய இந்நூற்பகுதியில் சமயச் சடங்குடன் தொடர்புடைய வெறியாட்டு முதலிய கூத்துகளைப் பற்றிக் கூறியுள்ளார். (பக்கம் 267)

**போர்க்கள ஆடல்**

போரில் பெறும் வெற்றிக்காக ஆடப்படும் இக்கூத்து சங்க காலச் சிறப்பாகும். (பக்கம் 267)
(தமிழர் சால்பு - சு. வித்தியானந்தன்)

**- தொடரும் -**

**- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -**

# கால்வாய் வீதிகள்

இத்தாலி நாட்டின் வெனிஸ் நகருக்குள்ளே தெருக்களுக்குப் பதில் கால்வாய்கள் இருக்கும். அதில் பயணம் செய்ய 'கோண்டோலாஸ்' எனும் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுவர்களுக்கு மட்டும்**

முடிவுத்திகதி
**30- 11 - 2008**




# விவிலியம் கற்போம் - 71

**(எண்ணிக்கை 9:1–23)**

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

எகிப்து நாட்டிலிருந்து அவர்கள் வெளியேறிவந்த இரண்டாம் ஆண்டு முதல் மாதம் சீனாய்ப் பாலை நிலத்தில் ஆண்டவர் மோசேயோடு பேசினார். அவர் கூறியதாவது: இஸ்ரயேல் மக்கள் குறிக்கப்பட்ட காலத்தில் ........................................ கொண்டாடட்டும். இம்மாதம் பதினான்காம் நாள் அந்திமாலைப் பொழுதில் குறிக்கப்பட்ட நேரத்தில் நீங்கள் அதைக் கொண்டாடுவீர்கள்; அதன் எல்லா விதிமுறைகளின் படியும் எல்லா ஒழுங்குகளின் படியும் நீங்கள் அதைக் கொண்டாடவேண்டும். அவ்வாறே பாஸ்காவைக் கொண்டாடும்படி ........................................ இஸ்ரயேல் மக்களிடம் கூறினார். அவர்கள் முதல் மாதம் பதினான்காம் நாள் அந்திமாலைப் பொழுதில் சீனாய்ப் பாலை நிலத்தில் பாஸ்காவைக் கொண்டாடினார்கள். ஆண்டவர் மோசேக்குக் கட்டளையிட்டபடி எல்லாம் இஸ்ரயேல் ........................... செய்தனர். ஒருவன் பிணத்தைத் தொட்டுத் தீட்டுப்பட்டதை முன்னிட்டுச் சிலர் அந்நாளில் பாஸ்காவைக் கொண்டாட முடியவில்லை; அவர்கள் அந்நாளில் மோசேயிடமும் ஆரோனிடமும் வந்தனர். அந்த ஆள்கள் மோசேயிடம், "ஒருவனின் பிணத்தைத் தொட்டதால் நாங்கள் ........................................; ஆண்டவருக்கான காணிக்கையைக் குறித்த காலத்தில் செலுத்த இஸ்ரயேல் மக்களிடையே நாங்கள் மட்டும் ஏன் விலக்கப்படவேண்டும்?" என்று கேட்டனர். அவர் அவர்களிடம், "உங்களைப் பற்றி ஆண்டவர் இடும் ........................................ என்னவென்று நான் கேட்டறியும்வரை பொறுத்திருங்கள்" என்றார். ஆண்டவர் மோசேயிடம் கூறியது, "இஸ்ரயேல் மக்களிடம் சொல்; உங்களிலும் உங்களுக்குப் பின்வரும் தலைமுறைகளிலும் எவனாவது தீட்டுப்பட்டிருந்தால் அல்லது நெடும் ........................................ ஈடுபட்டிருந்தால் அவனும் பாஸ்காவைக் கொண்டாடவேண்டும். இரண்டாம் மாதம் பதினான்காம் நாள் அந்திமாலைப் பொழுதிலேயே அவர்கள் கொண்டாடவேண்டும்; அவர்கள் புளிப்பற்ற அப்பத்தோடும் ........................................ கீரைகளோடும் அதை உண்பார்கள். காலைவரை எதையும் மீதி வைக்கவோ அதன் எலும்பு எதையும் முறிக்கவோ கூடாது. ஆனால் ஒருவன் தீட்டுப்படாதிருந்தும் பயணத்தில் ஈடுபடாதிருந்தும் பாஸ்காவைக் கொண்டாடாது ஒதுங்கியிருந்தால், அவன் ........................................ திரு உறைவிடம் எழுப்பப்பட்ட நாளில் மேகம் உடன்படிக்கை திரு உறைவிடத்தை மூடியது; அதன்மேல் மாலை முதல் காலை வரை நெருப்பு மயமாய் இருந்தது. இது தொடர்ந்து நிகழ்ந்தது. மேகம் திரு உறைவிடத்தின்மேல் பல நாள்கள் தொடர்ந்திருந்தபோதுகூட இஸ்ரயேலர் ஆண்டவர் ........................................ கடைப் பிடித்தனர். புறப்படவில்லை. ஆண்டவர் கட்டளைப்படியே பாளையமிறங்கி, ஆண்டவர் கட்டளைப்படியே புறப்பட்டுச் சென்றனர். ஆண்டவர் மோசே வழியாகக் கட்டளையிட்டபடி அவர்கள் ........................................ வார்த்தையைக் கடைப்படித்தனர்.

**விடைகள் :** **கட்டளை, கசப்பான, பயணத்தில், விலக்கப்படுவான், ஆண்டவர், வார்த்தையை, மக்கள், பாஸ்கா, தீட்டுப்பட்டிருக்கிறோம், மோசே**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 71

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. மனித இதயம் ஒரு நிமிடத்துக்கு துடிக்கும் எண்ணிக்கை
   (70, 72, 74)

2. சுதந்திர அமெரிக்காவின் முதல் அதிபர்
   (ஆபிரகாம் லிங்கன், ஜோன் எப் கென்னடி, ஜோர்ஜ் வாசிங்டன் )

3. மஹாபாரத யுத்தம் நடந்த நாட்கள்
   (18, 20, 24)

4. இக்கரை மாட்டுக்கு அக்கரை ................................
   (தூரம், பச்சை, மோகம்)

5. உலகளவில் அதிகம் பார்த்து இரசிக்கப்படும் விளையாட்டு
   (டென்னிஸ், கிரிக்கட், கால்பந்தாட்டம்)

6. ‘ஆயிழை வந்தாள்’ என்பது
   (உவமைத் தொகை, அன்மொழித் தொகை, பண்புத் தொகை)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 71
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 69 விடைகள்

திருவிழிப்பு, மோசேயிடம், மெராரி, அர்ப்பணத்திற்காக, நத்தானியேல், வெள்ளித்தட்டு, பொன் பாத்திரம், பன்னிரண்டு, ஆட்டுக்கிடாய்கள், கெருபுகள்

## அறிவை வளர்ப்போம் - 69 விடைகள்

1) ஹிப்போகிரேட்டஸ் 2) 206 3) ஸாக்ஸபோன்
4) இத்தாலி 5) எட்டு 6) இரு பெயரொட்டுப் பண்புத் தொகை

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ்

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுவோர்**

- ஜேசுதாஸ் நிஷாந்தினி
  கல்முனை
- இ.பருணிக்கா
  வாழைச்சேனை

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- நோர்மன் நிரோஷன்
  கிரான் - மட்டக்களப்பு
- S. அபிலாஸ்
  மட்டக்களப்பு

**பாராட்டுப் பெறுவோர்**

- இ. கீர்த்திகா
  கல்லடி - மட்டக்களப்பு
- தோ. மேரிதிரேசா
  வாழைச்சேனை

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 20 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  அன்டனோ டெலன் செலர்
  வாழைச்சேனை
- **இரண்டாம் பரிசு** - 200/=
  D. துஷான் ஜெஸ்லி
  கல்முனை
- **3ம் பரிசு** - 100/=
  ர. மோஷி
  -அனுஷா
  திருகோணமலை

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

## 40வது ஆண்டு நிறைவு

# சிறுகதைப் போட்டி

## விதிகள்

- முழுத்தாளில் கையெழுத்தாயின் ஐந்து பக்கங்களுக்கு மிகாமலும் தட்டச்செழுத்தாயின் இரண்டு பக்கங்களுக்கு மிகாமலும் இருக்கவேண்டும்.
- சொந்தக் கற்பனையாகவும் ஏற்கனவே பிரசுரமாகாததாகவும் இருக்கவேண்டும்.
- தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்படவேண்டும்.
- முதல் மூன்று கதைகள் பரிசுக்குத் தெரிவுசெய்யப்படுவதோடு மேலும் ஐந்து கதைகளுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.
- பரிசுக்குத் தெரிவாகும் கதைகளும் பிரசுரத்துக்குப் பொருத்தமான கதைகளும் தொண்டனில் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**அனுப்பவேண்டிய இறுதிநாள்: 30.10.2008**

அனுப்பவேண்டிய முகவரி ➡

ஆசிரியர் – தொண்டன்,
40வது ஆண்டு நிறைவுச் சிறுகதைப் போட்டி,
அ.பெ.இல – 44,
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org